உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அருணந்திசிவாசாரியர்

அருளிச்செய்த

இருபாவிருபஃதுமூலமும்,

திருவாவடுதுறையாதீனம்

நமச்சிவாயத்தம்பிரான்செய்த உரையும்.

இவை,

காஞ்சிபுரம்

மகாவித்வான்

கந்தசாமிமுதலியார்

மாணாக்கர்

கா - சுந்தரமூர்த்திமுதலியார்

அவர்கள் பார்வையிட்டு,

கன்னிகைப்பேர்

முருகேச முதலியாரால்

சென்னை

ஜீவகாருண்யவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1898௵

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

இருபாவிருபஃது.

வெண்பா.

கண்ணுதலுங் கண்டக் கறையுங் கரந்தருளி (நல்லூர்
மண்ணிடையின் மாக்கண் மலமகற்றும் - வெண்ணெய்
மெய்கண்டானென்றொருகான் மேவுவரால்வேறின்மை
கைகண்டா ருள்ளத்திற் கண்.

வியாக்கியானம்.

கண்ணுதலுங் கண்டக் கறையுங் கரந்தருளி- பூரணகத்தாவாக விருக்கப்பட்ட ஸ்ரீ கண்ட பரமேஸ்பர ஞசாரிய விக்கிரகமாகத் திருமேனிகொண் டெழுந்தருளு மவசரத்து நெற்றியிற் றிருநயனமுந் திருமிடற்றிற் றரித்தருளின நஞ்சமாகிய கறுப்பினையு மறைவுசெய்தருளி,—மண்ணிடையின் மாக்கண் மலமகற்றும்-பூமியின்கண்ணே வியாபரிக்கப்பட்ட ஆன்மாக்களுக்குண்டாய பாசத்தைத் தீக்ஷாக்கிரமங்களினாலே போக்குகிற,—வெண்ணெய்நல்லூர் மெய்கண்டான் - திருவெண்ணெய்நல்லூரென்கிற திருப்படை வீட்டிலே திருவவதாரஞ் செய்த மெய்கண்ட தேவனென்கிற திருநாமத்தினையுந் தரித்தருளினவனை,—என்றொருகான் மேவுவரால் - ஒருகாற்சென்று பொருந்தி நினைத்தவர்கள்,—வேறின்மை கைகண்டா ருள்ளத்திற்கண் - உயிர்க்குயிரா யிருக்கிற சிவனைத் தங்களிடத்திலே புலப்படக் கண்டவர்கள், (இதன்கருத்து,) கடவுள் வணக்கமாகிய குருது

தி என்னவே சிவமென்று மாசாரியரென்றும் வேருயிராதிரண்டு மொருமுதலென்பது கண்டுகொள்க. அப்படியாறு லிந்தச் சிவ னிப்படி மானிடவேடமாக வேண்டுவா னேனெனில் அஃதாவது விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலரென்னப்பட்ட மூவகை யான்மாக்களையுஞ் சிவனிரக்ஷிக்கு மிடத்து யாதாமொருபட்சிகளை மிருகங்களைப் பிடிக்கவேண்டினவர்க ளதற்கதற் கேற்ற வினப்பார்வைகளைக் காட்டிப் பிடித்தாற்போல ஆன்மாக்களெடுக்கப்பட்ட வுருவத்துக்குத் தக்க திருமேனி கொண்டருளி யிரட்சிக்கை கடனுகையால் சகலராயுள்ள மானுடரை யிரட்சிக்குமிடத் தவர்களைப்போல மானிடச் சட்டை சாத்தியாசாரிய விக்கிரகமாக வெழுந்தருளின தெனவறிக, சிவனான்மாக்களெடுக்கப்பட்ட வுருவத்துக்குத் தக்க திருமேனி கொண்டருளுவனென்பதற்குப் பிரமாணம். ஞானபூசா கரணத்தில், "எவ்வுலகத்து மூர்த்தி யேதுகொண் டிவனியங்கு, மவ்வுலகத்து மேனி யதுகொண்டங்கமரு மீசன்". எ-து. கண்டுகொள்க சகலராயுள்ள மானுடரை யிரட்சிக்குமிடத் தவர்களைப்போல மானிடச் சட்டைசாத்தி யாசாரிய விக்கிரகமாக வெழுந்தருளுவ னென்பதற்கு. பி - ம். போற்றிப் பஃறொடையில், "நன்னெறி விஞ்ஞானகலர் நாடுமலமொன்றினையு, மந்நிலையே யுண்ணின் றறுத்தருளிப் -பின்னன்பு. மேவாவிளங்கும் பிரளயாகலருக்குக், தேவாய்மலகன்மந் தீர்த்தருளிப் - பூவலயர், தன்னின் றநீங்காச்சகலர்க்கவர்போல, முன்னின்று மும்மலந்தீர்த் தாட்கொள்கையன்னவனுக், காதிகுண மாதலினு லாடுந்திருத்தொழிலுஞ், சோதி மணிமிடற்றிற் சுந்தரமும் - பாதியாம், பச்சையிடமும் பவளத் திருச்சடைமே, வைச்சநதியு மதிக்கொழுந்து - மச்சமற, வாடுமரவு மழகார் திருநுதன்மே, னீடுருவவன்னி நெடுங்கண்ணுங் - கேடிலயங், கூட்டுந் தமருகமுங் கோலவெரியகலும், பூட்டரவக் கச்சம் புலியதளும் - வீட்டின்ப, வெள்ளத் தழுத்தி விடுந்

தாளினு மடியா, ருள்ளத்தினும் பிரியா வொண்சிலம்புங் - கள்ள வினை, வென்று பிறப்பறுக்கச் சாத்திய வீரக்கழலு, மொன்றமு ருத்தோன்றுமட லுள்ளடக்கி - யென்று, மிறவாதவின்பத் தெமை யிருத்தவேண்டிப், பிறவாமுதல்வன்பிறந்து - நறவாருந், தாரு லாவும் புயத்துச் சம்பந்தநாதனென்று, பேரிலா நாதனொரு பேர் புனைந்து - பாரோர்த, முண்டி யுறக்கம் பயமின்ப மொத்தொ ழுகிக், கொண்டுமகிழ்ந்தகுணம்போற்றி" என்றும் திருவாசகத் தில் அருபரத்தொருவ னவனியில்வந்து, குருபரனாகி யருளிய பெருமையைச், சிறுமையென்றிகழாதே" எ-ம். சிவப்பிரகா சத்தில், உணர்வாய்நின்ற ஞானக்கூத்த னொருமூர்த்தி கொடு குறுகி." எ-ம். "இறையருளுருவாய் வந்துகூட்டிடும்." எ-ம். வருமேதுக்களைக்கண்டுகொள்க. இவ்வுதாரணங்களைக் காட்டி யது இந்நூலாசாரியனை முன்னிலைக் கத்தாவாக நாட்டிவரு கையா லாசாரியருக்குங் கத்தாவுக்கும் வேற்றுமை யில்லை யென்னுங் கருத்தைப்பற்றியெனவறிக. இந்நூற்பயன் புறச்சம யத்தாரால் மயங்காமை. இந்நூற்காரணம் பொருணிச்சயமுற்று நிட்டைகூடல். (௧)

இங்ஙன மாசாரிய மூர்த்தியாகவந்து இரட்சிக்கிற தேவரீ ருயிர்க்குயிராய்நின் றறிவிக்கச் செய்தேயு மடியேனுக்கு அறி யாமை யுண்டாவானே னென்னும் வினவுமதற்கு விடையுமே லருளிச்செய்வா னெடுத்துக் கொண்டருளியது.

நேரிசையாசிரியப்பா.

கண்ணகல் ஞாலத்துக் கதிரவன் றனென
வெண்ணெய்த் தோன்றிய மெய்கண்ட தேவ
காரா கிரகக் கவியாழ் வெனைநின்
பேரா வின்பத் திருத்திய பெரும
வினவ லானா துடையே னெனதுள

நீக்கா இலமை யூங்கு முளையா
லறிவின் மைமலம் பிரிவின் மையெனி
னொரவினை யுணர்த்தும் விராய்நின் றனையேற்
றிப்பிய மந்தோ பொய்ப்பகை யாகாய்
சுத்த னமலன் சோதி நாயகன்
முத்தன் பரம்பர னெனும்பெயர் முடியா
வேறுநின் றுணர்த்தின் வியாபக மின்றாய்ப்
பேறு மின்று மெமக்கெம் பெரும்
விருநிலந் தீரீ ரியமா னன்கரமெனும்
பெருநிலைத் தாண்டவம் பெருமாற் கிலாதலின்
வேறே வுடனே விளம்பல் வேண்டுஞ்
சீறி யருளல் சிறுமை யுடைத்தா
லறியாது கூறினை யபக்குவ பக்குவக்
குறிபார்த் தருளுனங் குருமுத லாயெனி
னபக்குவ மருளினி மறியேன் மிகத்தகும்
பக்குவம் வேண்டிற் பயனிலை நின்றாற்
பக்குவ மதனாற் பயனி வரினே
நின்னைப் பருவ நிகழ்த்தா தன்னே
தன்னைப் பாரிலி யென்பதுந் தகுமே
மும்மலஞ் சடமணு மூப்பிள மையினி
னின்மலன் பருவ நிகழ்த்திய தியார்க்கோ
வுணர்வெழு நீக்கத்தை யோதிய தெளினே
யிணையிலி யாயினை யென்பதை யறியேன்
யானே நீக்கினுந் தானே நீங்கினுங்
கோனே வேண்டா கூறல் வேண்டுங்
காண்பா ரியார்கொல் காட்டாக் காலெனு

மாண்புரை யுணர்த்திலை மன்றபாண்டியன்
கேட்பக் கிளக்கு மெய்ஞ் ஞானத்தி
னுட்பா லவர்க்கரு ளென்பதை யறியே.

பி-ம். கண்ணகன் ஞாலத்துக் கதிரவன்றானென வெண் ணெய்த்தோன்றிய மெய்கண்டதேவ - இடமகன்ற பூமியினிடத் துண்டாகிய விருளைக் கடிவது பொருட்டாக வாகாசமார்க்கத் திலே தோன்றப்பட்ட வாதித்தனைப்போல வான்மாக்களுக் குண்டாகிய வஞ்ஞானமாகிய விருளைக் கடிவதுபொருட்டாகத் திருவெண்ணெய் நல்லூராகிய திருப்படை வீட்டிலே திருவவ தாரஞ்செய்தருளின மெய்கண்டநாதனே,— காரார்கிரகக் கலி யாழ் வெனைநின் பேராவின்பத் திருத்திய பெரும - அஞ்ஞான மாகிய சிறைச்சாலைப்பட்டு விலங்காகிய தேகத்திற் கிடந் தழுந் துகிற வடியேனை நின்னுடைய வசைவற்ற பேரின்பமான வ நுபவத்திலே யிருத்திய தம்பிரானே,—வினவலா னுதுடையே ன் - அடியேனுக்கொருவினா தேவரீர் சந்நிதியிலேவிண்ணப்பஞ் செய்யவேணுமென்று அனவரதமு முண்டாயிருந்தது ; அதேதெ ன்று கேட்டருளுமாகில். எனதுளநீங்கா மைநிலையுங் குறுகையா ல்- அடியேனுள்ளத்தைவிட்டு நீங்காமல் நிற்கிற முறைமை யகா இயே தொடங்கி மிகவு முண்டாயிருக்குமிடத்தும்,— அறிவின் மை - அடியேனுக் கறியாமை வருவானேனென்று கேட்கில்,— மலம்பிரி வின்மையெனின்-அஃதான்மாவினோடு மநாதியேகூடி வரப்பட்ட வாணவமல முதனைவிட்டு நீங்காதபடியினாலேநா னுனக்கறியாமை யுண்டானதென்று தேவரீரருளிச்செய்யில்,— ஓராலினையுணர்த்தும் - அடியேனைவிட்டுத் தேவரீர் நீக்கமாக வொதுங்கிநின் றருளுமென்கின்றதை யுண்டாக்கும்,—விராய் நின்றனையேல் அப்படிநம்மை நீக்கமாகச்சொல்லாதுநாமு முன் னோடுகூடியே நிற்போமென் றருளிச்செய்யில்,- திப்பியமந்தோ அப்படித் தேவரீரருளிச்செய்தது தெய்வீகமான தோராச்சரிய

மாகவிருந்தது. அது வென்னென்று கேட்டருளுமாகில்,-பொய்ப்பகை யாகாய் - அப்படி யஞ்ஞானத்தோடும் கூடியிருக்கப்பட்ட வடியேனேடு தேவரீருங் கூடியிருக்குமாகில் பொய்யென்கிறவஞ்ஞானத்தைச் சேதிக்கிறவனென்று தேவரீரைச் சொல்லவேண்டியதில்லையாம். அன்றியும்,—சுத்தனமலன் சோதிநாயகன் முத்தன் பரம்பரனெனும் பெயர் முடியா-அநாதி சுத்தனுயிருக்கிறவனென்றும் நின்மலனென்றும் எல்லாத்துக்கு மேலான வாதியந்தமில்லாத பேரொளியா யிருக்கப்பட்ட கத்தாவென்றும் சர்வ வுபாதி சூநியங்களெல்லாங் கழன் றப்பாற்பட்டவனென்றும் வஸ்துவென்றுசொல்லப்பட்டதற் கெல்லா மப்பாற்பட்டவஸ்துவென்றும் இங்ஙனஞ் சொல்லப்பட்ட திருநாமங்களுந் தேவரீருக் குண்டாகா (அதெப்படி யென்னில் மலரகிதன் மலசம்பந்தியா யிருக்கிறவனேடுகூடி நில்லானென்று சீடன் வினவ) அப்படியல்ல, — வறுநின் றுணர்த்தின்-நாமுன்னேடுகூடி நிற்பதில்லை யுன்னறிவுக் கறிவாக வேறே நின்றே யுன்னையறிவித்து நிற்போமென்று தேவரீரருளிச்செய்யில்,—வியாபகமின்ருய்ப்பேறு மின்ருமெமக் கெம்பெரும - எம்முடைய பெருமானே அப்பொழுது தேவரீருக்குச் சர்வவியாபியென்கிறது மில்லையா அடியேனுக்குச் சாயுச்சியமென்கிற பேருமில்லையாம், அன்றியும்,—இருநிலந் தீநீ ரியமானன் காலெனும் பெருநிலைத் தாண்டவம் பெருமாற்கிலாதவின் - இருநிலனுய்த் தீயாகிநீருமாகி யியமானனுயெறியுங்காற்றுமாகி யருநிலையதிங்களாய் ஞாயிருகி யாகாயமா யட்டமூர்த்தி யாகியென்னுந் திருத்தாண்டகத்தின்படி பூரணநிலையாகிய திருக்கூத்துந் தேவரீருக் கில்லையாகவேணும்,ஆகையால்,-வேருேவுடனே விளம்பல்வேண்டும் - தேவரீரடியேனை யறிவிக்குமிடத்து வேருய் நின்றறிவிக்குமோ கூடியொன்ருய் நின்றறிவிக்குமோ விவை யிரண்டினுமொன்று தீரவருளிச் செய்தருளவேண்டும்;...சீறியருளல் - அப்படி யடியேன்

கேட்ட வினவுக்கு விடையருளாமற் றிருவுளக்கேடாக வேண்டு வதில்லை. அது வென்னென்று கேட்டருளுகில்,... சிறமையடைத்தால் - அடியேன் றற்போதனுகையால் தோன்றினதை விசாரியாமல் விண்ணப்பஞ்செய்தே னதற்குத்தர மருளிச்செய்து தெளிவிக்கையே வேண்டுவது,—அறியாது கூறினே - அப்படி நீ கேட்ட வினவுக்குத்தரஞ் சொல்லாமற் கோபித்துக்கொண்டோமென்று நீ யறியாமற்சொன்னுய். அப்படியானல் தேவரீர் திருவுள்க்கேடாவானே னென்று நீ கேட்கில்,—அபக்குவபக்குவக் குறிபார்த்தருளினங் குரு முதலாயெனின்-அநுவயம் குருமுதலாய பக்குவ பக்குவ குறிபார்த் தருளினமெனின் - நாமாசாரியமூர்த்த மாகையாலே அபக்குவனைக்கண்டாற் கோபிக்கிறதும் பக்குவனைக்கண்டாற் பிரியப்படுகிறது மாசாரியனுக்கு முறைமையாந் தன்மைபோல நான்சொன்னவத்தங்களை நீ மாறுபாடாகக் கொள்ள நாம் கோபித்துக்கொண்டதா யிருக்குமென்னில்; அப்படித் தேவரீர்சொன்ன வத்தங்களை யடியேனறியுமிடத்து,—அபக்குவ மருளினுமறியேன் - அடியே னபக்குவனுகையாலே தேவரீரருளிச்செய்கிற வத்தங்களை யறியப்போகிறதில்லை. அதுவன்றியும்,—மிகத்தரும் பக்குவம் வேண்டில் - மிகுந்த சத்திநிபாதத்துக் குரிய பக்குவனுயிருக்க வேணுமென் றருளிச்செய்யில்,—பயனிலை நின்றல் - பக்குவனுக்கு ஒருவர் சாதாரணமாகவந் தறிவிக்க வேண்டாதது கொண்டே தேவரீராலொரு பிரயோசனமு மில்லையாம், அல்லது,—பக்குவமதனுற் பயனிவரினே - ஆன்மாக்கள் பக்குவத்துக்குத் தக்கபயனுகத் தேவரீரெழுந்தருளுமாகில்,—நின்னைப்பருவ நிகழ்த்தாது - அந்தப்பக்குவமென்று சொல்லப்பட்டது சடமானபடியினுலே அது தேவரீரை யடியேனுக் குண்டாக்கமாட்டாது,—அன்றே - அதல்ல, அந்தப்பக்குவமே யுண்டாக்குமென்கிலோ,—

தன்னொப்பாரிலி யென்பதுந்தகுமே - தேவரீரையொத் தாரு
மிக்காரு மில்லர்தவரென்று சிவாகமங்கள் சொல்லுகிறதும் வழ
க்கல்லவாம். அதன்றியம், — மும்மலஞ் சடமனு மூப்பிளமையினி
நின்மலன்பருவ நிகழ்த்திய தியார்க்கோ - ஆணவமாயை காமிய
மென்னு மூன்றுமலங்களுஞ் சடமாயிருப்பதுகொண்டு பக்குவம்
வேண்டுவதில்லை, ஆன்மாவச்சுமாறி யெடுத்தவுடல்தோறு மடுத்
ததின் றன்மையாய் மூப்பிளமை வருதலால் மூப்பிளமை யில்
லாதவனுக்குப் பக்குவங்கூடாது, தேவரீரோ வென்றால் தேக
சம்பந்தமில்லாம லமலனாயிருக்கையினாலே யதுசொல்லவொண்
ணாது, ஆதலாற் பக்குவ மார்க்காயதென்று வினவியவிடத்து,
—உணர்வெழு நீக்கத்தையோதியது - உனக்கோ ரறிவுண்டா
மிடத்து அந்தமலங்கணீங்கிற வவதாரத்தாற் புண்ணியபாவந்
துலையொப்புவந்துண்டாய்ப் பாசனீங்கினது தானும்பக்குவமெ
ன்றது, —எனினே - என்று தேவரீ ரருளிச்செய்யில், —இணையி
லியாயினை யென்பதையறியேன் - தேவரீரை யொப்பாரு மிக்
காரு மில்லாதவரென்கிறதை யடியேனின்றுவிட்டேன். அதே
தென்று கேட்டருளுகில், —யானே நீக்கினுந் தானே நீங்கினுங்
கோனேவேண்டா - அந்த மலங்களை யடியேன் தானே நீக்கிக்
கொள்ளினு மவை தானேநீங்கினுங் கோனாகிய தேவரீர் வேண்
டா, ஆகையால் தேவரீர் நீக்க விகாரியல்லீரென்று வினவியவி
டத்து, —கூறல்வேண்டும் - அடியேன் விண்ணப்பஞ் செய்
யத்தக்க தொன்றுண்டு அதேதென்று கேட்டருகில், — காண்
பார்யார் கொல்காட்டாக் காலெனு மாண் புனையுணர்ந்திலை -
"காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்கால்" எனு மழகிய
திருத்தாண்டகத்தி னுரையைத் தேவரீரின் றிங்கருளிற்றி
ல்லைபாம், — மன்ற - அறுதிப்பட்டு நிச்சயமாக அடியே
னுக்கு முறைமையாவது, — பாண்டியன் கேட்பக் கிளக்கு

மெய்ஞ்ஞானத்தி னுட்பாலவர்க்கரு ளென்பதை யறியே - பாண்டிய ராசாவானவன் கேட்கத்தக்கதாகத் திருஞானசம்பந்தசுவாமிக ளருளிச்செய்த ஆட்பா லவர்க்கருளென்னும் உண்மைஞானவுபதேசத் திருப்பாட்டினுரையாகிய சிவஞானத்தை யறிந்தேனில்லை, நிச்சயமாக வதுவேயறிவென்றுஅடியவராயுள்ளவர்களுக்குத் தேவரீர் நாயனென்று கண்டிருக்கிறதொழிய வேறென்று விகற்பித்துக்கேட்க வழக்கில்லையென்கிற முறைமையே யறிவாயுள்ளது என்று விறவற்றேன் - (க-து) பதியொன்றுண்டென்று மப்பதி தொழிற்படுத்தினாலன்றி யாவுந் தொழிற்படாதென்பதாம் (நுட்பம்) மலம் பிரிவின்மையெனின் என்பதற்கு ஆன்மாவினோடு மநாதியேகூடி வரப்பட்ட வாணவமல முன்னைவிட்டு நீங்காதபடியினாலென்று பொருள்கூறியதற்கு பி - ம், சித்தியாரில், "அறிவிலன்மூர்த்தனித்தன்" என்னுஞ் செய்யுளில் "பிரிவிலன் மலத்தினோடும் கண்டுகொள்க. விராய்நின்றனையேல் - அப்படி நம்மை நீக்கமாகச்சொல்லாது நாமு முன்னோடுகூடியே நிற்போமென்று பொருள்கூறியதற்கு பி-ம், சிவஞானபோதத்தில். "மெய்ஞ்ஞானந்தன்னில் விளையாதசத்தாதல்" என்ற பாடத்தில் "தண்கடனீருப்புப் போற்றானேயுளமுளவாய்த்தான்" கண்டுகொள்க. வேறுநின்றுணர்த்தின் எ-கு நாமுன்னோடு கூடி நிற்பதில்லை யுன்னறிவுக் கறிவாக நாம் வேறேநின்றே யுன்னையறிவித்து நிற்போமென்று பொருள் கூறுதற்கு பி-ம், சிவஞானபோதத்தில், 'மன்னுசிவன் சந்நிதியின் மற்றுலகஞ் சேட்டித்த, தென்னு மறையி னியன்மறந்தாய் - சொன்னசிவன், கண்ணாயுளம்வினையாற் கண்டறிந்து நிற்குங்கா, ணெண்ணான் சிவனசத்தை யின்று' எ-து கண்டுகொள்க. சிறுமையுடைத்தால் எ-கு ஆசாரியன் மேல்வைத்து ஆன்மா வவனுக்குச் சிறுமையாமென்று பொருளுரைப்பாருமுளர் அது குருசிஷக்கிரமத்துக்குப் போதாதாகையால் பொருளாகாதென வறிக. பக்குவமதனாற் பயனிவரினே எ-கு ஆன்மாக்கள் பக்குவத்துக்குத்தக்க

பயனுகத் தேவரீ ரெழுந்தருளுமாகில் என்று பொருள் கூறிய தற்கு பி - ம். சிவப்பிரகாசத்தில். "நாடியசத்திநிபாத நாலுபாத நண்ணும்வகை யெண்ணரிய ஞானபாதங், கூடுமவர் தமக்குணர் வாய்நின்ற ஞானக்கூத்தனொரு மூர்த்தி கொடுகுறுகிமோக, நீடி யகே வலசகல நிகழாவாறு நிறுத்திமல மறுக்குமிது நிலையார்சுத் தங், கேடில்புகழ் தருஞ்சரிதை கிரியாயோகக் கேண்மையரே லிவை யுணர்த்தக் கிளக்குறுமே" கண்டுகொள்க. உணர்வெழு நீக்கத்தை யோதியதுஉனக்கோ ரறிவுண்டாமிடத்து அந்த மலங் கணீங்கிற வவதரத்தாற் புண்ணிய பாவந் துலையொப்புவந் துண் டாய்ப் பாசநீங்கினதுதானும் பக்குவமென்றதற்கு பி-ம்; சிவப் பிரகாசத்தில், "எண்ணரிதா" என்ற விருத்தத்தில் "மலபா கம்பொருந்தியக்கா லருளாலுண்ணிலவுமொளியதனு லிருளகற் றிப் பாதமுற்றிடும்." எ-து கண்டுகொள்க. பாண்டியன்கேட் பக் கிளக்குமெய்ஞ்ஞானத்தி னுட்பாலவர்க்கரு ளென்பதையறி யே எ-கு பாண்டிய ராசாவானவன் கேட்கத்தக்கதாகத் திருஞா னசம்பந்த சுவாமிக ளருளிச்செய்த ஆட்பாலவர்க்கருள் என்னு முண்மைஞான வுபதேசப் பாட்டினுரையாகிய சிவஞானத்தை யறிந்தேனில்லை நிச்சயமாக வதுவே யறிவென்று அடியார்களா யுள்ளவர்களுக்குத் தேவரீர் நாயனென்று கண்டிருக்கிறதொழிய வேறொன்று விகற்பித்துக்கேட்க வழக்கில்லையென்கிற முறை மையே யறிவாயுள்ளது என்று வினவற்றே என்றதுக்கு பி-ம். திருக்கடைக்காப்பு. "ஆட்பாலவர்க்கருளும் வண்ணமு மாதி பாண்புங், கேட்பான்புகிலளவில்லை கிளக்கவேண்டா" கண்டு கொள்க. (உ)

இங்ஙனம் பதியிலக்கணங்கேட்ட மாணவகன் பசுவிலக் கணங்கேட்கும் வினு மேலருளிச் செய்கின்றது.

அறிவறி யாமை யிரண்டு மடியேன்
செறிதலான் மெய்கண்ட தேவே - யறிவோ
வறியேனோ யாதென்று கூறுகே னாய்ந்து
குறிமாறு கொள்ளாமற் கூறு.

வி - ம். அறிவறியாமை யிரண்டு மடியேன் செறிதலால் - ஓரவதரத்திலே யறிந்து மோரவதரத்திலே யறியாமலுமாக விந்த விரண்டு பகுதியு மடியேன் கூடிவருகையினால்,—மெய்கண்ட தேவே - மெய்கண்டதேவனே,—அறிவோவறியேனோ யாதென்றுகூறுகேன் - அடியேனை யறிவென்று சொல்லப்பட் டிருக்குமோ அறியாதவனென்று சொல்லப்பட்டிருக்குமோ விவையிரண்டினுள் யாதென்று விண்ணப்பஞ் செய்வேன்,—ஆய்ந்து-இவ்விரண்டு பகுதியுந் திருவுள்ளத்திலேயாராய்ந்து பார்த்தருளி,—குறிமாறு கொள்ளாமற்கூறு - தேவரீரருளிச்செய்கிற வத்தத்தின் குறிப்புக் கடியேன்மறுத்து விண்ணப்பஞ் செய்யாம லருளிச் செய்தருள். (க-து) ஆன்மா சத்துமல்ல அசத்துமல்ல கூடினது தானுந்தன்மையாற் சதசத்தென்னுஞ் சிறப்பினையுடைத்தாம் அதாவது அறிவித்தா லறிகிறவனென்றது. உ-ம். சித்தியாரில். "அறிவிக்கப்படுஞ் சித்துமிவன்" எ-ம். சிவஞானபோதத்தில். "அறிவிக்கவன்றி யறியாவுளங்கள்" எ-ம். திருவாசகத்தில். "அறிவிலாமை யன்றேகண்டேதாண்டநாள்" எ-ம். கண்டுகொள்க

பசுவிலக்கணங் கேட்ட மாணவகன் மேற் பாசவிலக்கணங்கேட்கும் வினாவருளிச் செய்கின்றது.

கூறிய மூன்று மலத்தின் குணங்குறி
வேறு கிளக்கின் விகற்பங் கற்பங்
குரோத மோகங் கொலையஞர் மதநகை
விராயெண் குணனுமா ணவமென விளம்பினை

யஞ்ஞா னம்பொய் யயர்வே மோகம்
பைசா சூந்திய மாச்ச ரியம்பய
மாயவேழ் குண னு மாயைக் கருளினை
யிருத்தலுங் கிடத்தலு மிருவினை யியற்றலும்
விடுத்தலும் பாகிக்தை மேவலென் றெடுத்த
வறுவகைக் குணனுங் கருமத் தருளினை
யாங்கவை தானு நீங்காது நின்று
தன்வழிச் செலுத்தித் தானே தானு
மென்வழி யென்பதொன் றின்று மன்ன
வூநம் பெயரு முருவுங் கொண்டென்
னூரும் பெயரு முருவுங் கெடுத்த
பெண்ணை சூழ்ந்த வெண்ணெயம் பதியிற்
சைவ சிகாமணி மெய்யர் மெய்ய
மும்மலஞ் சடமென மொழிந்தனை யம்ம
மாறுகோள் கூறல் போலுந் தேறுஞ்
சடஞ்செய லதனைச் சார்ந்திடு மெனினே
கடம்பட மதனுட் கண்டிலம் விடம்படு
மூன்றிரள் போன்ற தாயிற் றூன்றி
யணைந்தாங் ககறல் வேண்டுங் குணங்களும்
பன்மையின் றுகு மெம்மைவந் தணைதாத்
தானோ மாட்டா தியானோ செய்கில
னீயோ செய்யாய் நின்யல னுயிட்
டியல்பெனிற் போகா தென்று மயல்கெடப்
பந்தம் வந்த வாறிங்
கந்தமாதி யில்லாயருளே.

வி - ம். கூறியமூன்று மலத்தின் குணக்குறி வேறுகளைக் கின்—அடியேனுக்கு முன்னே யுபதேசக் கிரமமாகப் பதி பசு பாசமாகிய திரிபதார்த்தங்களையுந் தேவரீ ரருளிச்செய்கிற வவ தாரத்து ஆணவ மாயை காமிய மென்னப்பட்ட மூன்று மலங்க ளினுடைய குணங்களையுங் குறிகளையும் வெவ்வேருகச் சொல் லுமிடத்து.—விகற்பங் கற்பங் குரோதமோகங் கொலைபஞ் மத நகைவிரா யெண்குணனு மாணவமென விளம்பினை - ஆன்ம போதமானது யாதாமொன்றுக்குத் தன்னை விகற்பித்துத் தன் னையொழிய மற்ருெருவரு மொவ்வாதவரென்று நிற்கிறதும், யா தொன்றினைச் சங்கற்பித்துக்கொண்டு நிற்கிறதும், யாதொன் றுக்குக் கோபம்பண்ணிக்கொண்டு நிற்கிறதும் விரோதநினைக் கிறதும், யாதொன்றுக் காசைப்படுகிறதும், யாதோ ருயிர்களைக் கொல்லுதலும், யாதொருதுன்பங்கள் தன்னிடத்தில் வந்தற்று லதற்கு விதனப்படுகிறதும், யாதொன்று சொல்லுமிடத்துஞ் செய்யுமிடத்து மகங்காரமாய் நிற்கிறதும், யாதொன்றுக்குஞ் சிரித்துக்கொண்டு திரிகிறதுமாக விங்ஙனங் கூறப்பட்ட குணங் களெட்டும் "ஆணவ மலத்தினுடையதென் றருளிச்செய்தாய்; அன்றியும்,—அஞ்ஞானம் பொய்யயர்வே மோகம் பைசாசுந் நியமார்ச் சரியம்பயமாய வேழ்குணனு மாயைக்கருளினை - பொ ய்யை மெய்யென்று கொள்ளுதல் பொல்லாங்கு செய்தலும், பொய்சொல்லுதலும், கண்டதை மறந்து மயங்கி வருந்து கிறதும், காமவாசையால் மூர்ச்சிக்கையும், ஆசையுண்டா யதனை யில்லையாக வொளித்தலும், ஆன்மாக்களைக் கொல்ல வடிக்க வெழுநினைவும் பிறர்க் கழுக்காறுசெய்து கேடுநினைக் கிறதும் பிறரோடு வயிராக்கியம் பாராட்டுகிறதும், உயிருக்கிறுதி வருமென்று அச்சப்பட்டுத் திரிகையுமாக விங்ஙனஞ் சொல்லப் பட்ட குணங்களேழும் மாயாமலத்தினுடையதென் றருளிச் செய்தனை,—இருத்தலுங் கிடத்தலு மிருவினை யியற்றலும் விடு த்தலும்பர நிந்தைமேவலென் றெடுத்த வறுவகைக் குணனுங்

கருமத்தருளினை - ஒவ்வொரு தலங்களைப்பற்றி யிருத்தலும்
நோயாய்க்கிடத்தலும், புண்ணிய பாவங்களைச் செய்தலும்,
ஒவ்வொரு பறறுக்களாய் நின்ற தொந்தனைகளை விடுதலும், சர்
வரையு நிந்தித்து நடக்கிறதே தொழிலாகப் பொருந்தியிருக்
கிறதும், உடல்மாறிப் பிறத்தலு மிகழ்ந்தாருடன் பொருந்தலு
மாக விவ்வணஞ் சேர்ந்திருக்கு மறுவகைக் குணங்களையுங் கன்ம
மலத்தினுடையதென் றருளினாய்,—ஆங்கவைதானு நீங்காது
நின்று - முன்சொல்லப்பட்ட காரண மலங்களினின்றும் விரியப்
பட்ட காரியமாகிய - உக - வகையு மடியேனைவிட்டு நீங்
காம லனவரதமுநின்று,—தன்வழிச் செலுத்தி - தனக்குண்
டாகிய தொழில்களின் முறைமையிலே யடியேனையுங் காரியப்
படுத்தி,—தானே தானாய் - அடியேனென்றொரு முதலில்லையெ
னும்படி மேவிட்டு நின்றுகொண்டு,—என்வழியென்ப தொறி
ன்றுமன்ன - தம்பிரானே அடியே னிச்சைவழி யென்கிறது
சற்றும் வருகிறதில்லையாம்,—ஊரும்பெயரு முருவுங்கொண்டெ
ன் னூரும்பெயரு முருவுங்கெடுத்த - அடியேனுக்குண்டாயிரு
க்கப்பட்ட மலங்களை நீக்குகைப் பொருட்டாக ஊரும்பேரு
முருவுமில்லா தேவரீர் ஊரும்பேரு முருவுங்கொண்டு அடியே
னுக்குண்டாயிருக்கப்பட்ட ஊரினையும் பேரினையு முருவத்தினை
யுங் கெடுத்தாய் என்னவே மேலொரு சநநமெடாத வண்ணங்
கெடுத்துப் போட்டவனென்பது கருத்து.—பெண்ணை சூழ்ந்த
வெண்ணெயம் பதியிற் சைவசிகாமணி - பெண்ணை யாற்றுநீர்
சூழப்பட்ட திருவெண்ணெய் நல்லூரிலே யெழுந்தருளி யிருப்ப
தாய் சைவசமயத்துக்கோ ரபிஷேகரத்தினமாயுள்ளவனே,—
மெய்யர்மெய்ய - பிரபஞ்சமாகிய பொய்யைக் கடியப்பட்ட
சத்தியவான்களுக் குண்மையா யுள்ளவனே,—மும்மலஞ்சட
மெனமொழிந்தனை - அடியேனுக்கு முன்னே யுபதேசக் கிரம
மாக வருளிச்செய்கிற வவதரத்தி லாணவமாயை கன்மமென்
னப்பட்ட மூன்று மலங்களையுஞ் சடமாகிய வசேதனமென்ற

ருளிச்செய்தனே,—அம்ம - அடியேன் விண்ணப்பஞ்செய்கிறதை அழகிதாகக் கேட்பாயாக,—மாறுகோள் கூறல்போலும் - முன்னே யடியேனுக் கருளிச்செய்கிற வவதாரத்திலே யசித்தாகிய மலங்களைச் சடமென்றும் மாறுபாடாக வருளிச்செய்ததாயிருக்கும், அப்படி யல்லகாண்.—தேறுஞ்சடம் - அறுதியாகவந்த மலங்கள் சடமே தப்பாது என்று தேவரீ ரருளிச்செய்யில் அவை சேட்டைப்படுவானேன்,—செயலதனைச் சார்ந்திடும் - நீ யறிவுள்ளவனாகையா லுன்னோடு கூடுகையி லந்தமலங்களுஞ் சேட்டைப்பட்டதாயிருக்கும்,—எனினே - என்று தேவரீ ரருளிச்செய்யுமாகில்,—கடம்பட மதனுட் கண்டிலம் - கடபடாதிகளாயுள்ள சால் குடம் புடவை சீலைமுதலாயுள்ளவை யடியேனோடு கூடின வவதாரத்து அப்படிச் சேட்டைப்படக் கண்டேனில்லை, விடம்படு மூன்றிரள்போன்றது - அந்த மலங்கள் கடபடாதிகள்போலல்ல விடத்தையுடைய வசநாவிமுதலாயுள்ள நஞ்சுகள் சடமாயிருந்தாலும் அறிவாயிருந்த வான்மாக்கள் புசித்த வவதாரத் தந்தவறிவை யழித்துத் தன்குண மேலிட்டு மயக்கினாற்போல வந்த மலங்களுஞ் சடமாயிருந்தாலு மறிவாயுள்ள வுன்னோடு சம்பந்தமான வவதாரத்து அவையு மப்படி மேலிட்டு மயக்கும்,—ஆயின் - அப்படி யானால்,—தோன்றிய உணக்தாங் ககறல்வேண்டும் - அந்த நஞ்சானது புசித்தவர்களை மறைத்து மேலிட்டுநின்று மீளவும் விட்டுப்போனாற்போல விந்தமலங்களு மப்படிச் செய்யவேணும் அப்படிக் கண்டோமில்லையே, அன்றியும்,—குணங்களும் பன்மையின்முகும் - இந்த மலங்களுக் குவமையாகச் சொல்லப்பட்ட நஞ்சுகளுக்கிந்தமலங்களைபோலப் பலகுணங்கள் செய்யக்கண்டதில்லை, ஆகையால்து திருட்டாந்த விரோதமென்று கண்டுகொள்க, அன்றியுமந்த மலங்கள்தான்,—எம்மைவந் தணைதரத்தானேமாட்டாது சடமேயானு லடியேனைவந்து பொருந்துகைக்குத் தானாகமாட்டாது,—யானேசெய்கிலன் - அடியேனுக்குக் குற்றமாயுள்ளது

வேணு மென்று அடியேன் தானே யுண்டாக்கிக் கொள்வது
மில்லை,—நீயோ செய்யாய் நின்மலனையிட்டு - தேவரீர் மலரகி
தனுயிருக்கையா லஞ்ஞானமாகிய மலங்களை யடியேனுக் குண்
டாக்சப்போகிறதில்லை, இவை மூன்றுவகையு மன்றி,—இயல்
பெனில் - அந்தமலங்க ளான்மாவுள்ளவன்றே சுபாவமாக வுள்
ளதென் றருளிச்செய்யில்,—போகாதென்று - பாலில் வெளுப்
புங் கரியிற் கறுப்பும்போல வியல்பாயுள்ள சுபாவத்துக் கொ
ருகாலத்திலு மழிவில்லையாம்,—மயல்கெட - அடியேனுக் கிந்
தச் சந்தேகந் தீரத்தக்கதாக,—பந்தம் வந்தவாறிங் கந்தமாதியி
ல்லாயருளே - முடிவுமுதலு மில்லாத தம்பிரானே மயக்கந்தீர
விந்தப் பாசபந்தங்க ளடியேனோடு வந்துபொருந்தின முறை
யெப்படியென் றருளிச்செய்யவேணும். (க-து.) பாசம் நெல்
லுக் குமிபோலவும், செம்பிற் காளிதம்போலவும் நின்றநிலைமை
கண்டதல்ல நீக்கங்கூட்டமில்லை என்பதாம். உ-ம். சிவஞான
போதத்தில். "நெல்லிற் குமியு நிகழ்செம் பினிற் களிம்புஞ்,
சொல்லிற் புதிதன்று தொன்மையே" எ-ம். சித்தியாரில்,
"மும்மல நெல்லினுக்கு முளையொடு தவிடுமிப்போல்" எ-ம்.
சிவப்பிரகாசத்தில். "நெல்லுமுமி தவிடுமிபோ லநாதியாக
நிறுத்திடுவர்" எ-ம். சொன்னமுறைமை கண்டுகொள்க. (ந-ம்.)
தேறுஞ்சடம். எ-கு. அறுதியாகவந்த மலங்கள் சடமே தப்
பாது என்று பொருள்கூறியதற்கு பி-ம், உண்மைநெறிவிளக்
கத்தில். "மலஞ்சடமென்றல்காட்சி" எ-ம், சிவப்பிரகாசத்
தில். "மாமைதான் சித்துருவாய் மருவமாட்டாது" எ-ம்,
சித்தியாரில். "உலகத்துக்கோர் வித்துமாயசித்தாய்" எ-ம்,
கண்டுகொள்க. செயலதனைச்சார்ந்திடும் எ-கு. நீயறிவுள்ளவ
னுகையா லுன்னோடு கூடுகையி லந்தமலங்களுஞ் சேட்டைப்
பட்டதாயிருக்கும் என்று பொருள்கூறியதற்கு பி-ம். சிவப்பிரகா
சத்தில். அந்நியமானவையுணர்த்தி யநந்நியமாய் நிறைந்தவறி
வறியாமையினுனு மருணிலவுங்காலந், தன்னிலவனேயாவுமா

நின்றதொன்மை தாமுணர்தலானுமுயிர் தானெனவொன்றில தாய், மன்னியிடமெல்ம்'' எ-து. கண்டுகொள்க, இவை மூன்று செய்யுளானும் கத்தாவறிவிப்போனென்று மான்மா வறிவித்தா லறிகிறவனென்றும் பாசமறிவித்தாலு மறியாதென்றுங் கூறிய வாறு காண்க. (௬)

இங்ஙனம் பதியிலக்கணம் பசுவிலக்கணம் பாசவிலக்கண ஞ்சொல்லிப் பாசதரிசனஞ்சொன்னபின் ஆன்மதரிசனஞ்சொல் லவேண்டுகையாலு மல்தரிசனம் வேறே சொல்லாதபடியினாலுந் தேவரீ ரருளமுன்னே பாசநில்லாது, அடியேனுக்குச் சுதந்திர மாய்க் காண வறிவுமில்லை, இந்தமலத்தைக் கண்டமுறைமை யெப்படி யென்னும் வினா மேலருளிச்செய்கின்றது. *

அருள்முன்பு நில்லா தடியேற்குக் கண்ணின்
றிருள்கண்ட வாறென்கொ லெந்தாய் - மருள்கொண்ட
மாலையா வெண்ணெய்வாழ் மன்னவா வென்னுடைய
மாலையா மாற்ற மதி.

வி-ம். அருள்முன்பு நில்லாது - அந்தமலங்க ளஞ்ஞான மாகையாலே தேவரீர் சந்நிதியிலே நில்லாது,—அடியேற்குக் கண்ணின்று-அடியேனுக்குச் சுதந்தரமாகக் காணுமறிவுமில்லை யாம். அப்படியிருக்க,— இருள்கண்டவா றென்கொ லெந்தாய் தம்பிரானே அடியேனந்த விருண்மலமாகிய வஞ்ஞானத்தை யறிந்தபடி யெப்படி,— = மருள்கொண்ட மாலையா மருளா கிய பண்ணை வண்டுகளிருந்து பாடப்பட்ட மாலையினையு டையானே,—வெண்ணெய்வாழ் மன்னவா - திருவெண்ணெய்

* இங்ஙனஞ் சொல்லப்பட்ட மலங்களடியேனோடுந் தேவ ரீருங் கூடிநின் றறிவிக்கச்செய்தே யடியேனை மயக்கிறவழி யெ ப்படி யென்னும் வினாமே லருளிச்செய்கின்றதென்று சொல்லு வாருமுளர் அது வினாவல்ல.

= மருள், இஃது குறிஞ்சியாழ்த்திறம்,

நல்லூரிலே யெழுந்தருளியிருக்கப்பட்ட தம்பிரானே,—என்னு டையமால்-அடியேனுக் குண்டாயிருக்கப்பட்ட விந்தமயக்கத் தை,—ஐயா - அடியேனுக்குச் சுவாமியாயுள்ளவனே,—மாற்ற மதி - போக்கத்தக்கதாகத் திருவுள்ளத்திலே யடைத்தருள். (க-து.) மலதரிசனத்தைப் பரமசுகத்திலே யழுந்துமிடத்திதுவ ரையு மலசம்பந்தத்தினாலே யல்லோ சுகத்தைப் பெறாதிருந்தோ ம் என்னு மநுமானத்தினாலே யறிகவென்பதாம், உ-ம். சிவப் பிரகாசத்தில், "அந்நியமானவையுணர்த்தி யநந்நியமாய் நிறைந்த வறிவறியாமையினானு மருணில்வுங்காலந், தன்னிலவனேயாவு மாய்நின்றதொன்மை தாமுணர்தலானுமுயிர் தானெனவொன் றிலதாய் மன்னியிடுமலம்" எ-து. கண்டுகொள்க. (ரு)

இங்ஙனம் பாசதரிசனஞ் சொல்லிப் பசுதரிசன மெப்படி யென்னும் வினா மேலருளிச் செய்கின்றது.

மதிநுதல் பாக னாகிக் கதிதர
வெண்ணெய்த் தோன்றி நண்ணியுள் புகுந்தென்
னுளம்வெளி செய்துன் னளவில் காட்சிக்
காட்டியெற் காட்டினை யெனினே நாட்டியெ
னுண்மையும் பெருமையு நுவலி னண்ணல்
பாதாள சத்தி பரியந்த மாக
வோதி யுணர்ந்த யானே யேக
முழுத்து நின்றனனே முதல்வ முழுத்தும்
புலன்கடைப் பூழை நுழைந்தனன் கலங்கி
யாக்கைத் தவத்தையு மடைந்தனன் னீங்கிப்
போக்கு வரவு புரிந்தனன் றாக்கி
யெவ்விடத் துண்மையு மிவ்விடத் தார்தலுஞ்

செல்லிடத் தெய்தலுந் தெரித்த மூன்றினு
ளொன்றெனக் கருளல் வேண்டு மென்று
மில்லா திலதா யுள்ள துளதெனுஞ்
சொல்லே சொல்லாய்ச் சொல்லுங் காலைச்
சிறுத்தலும் பெருத்தலு மிலவே சிறுத்தி
யானை யெறும்பி னனது போலெனின்
ஞான மன்றவை காய வாழ்க்கை
மற்றவை யடைந்தன வுளவெனி னற்றன்று
விட்ட குறையி னறிந்து தொன்று
தொட்டு வந்தனவென வேண்டு நட்ட
பெரியதிற் பெருமையுஞ் சிறியசிற் சிறுமையு
முரியது நினக்கே யுண்மை பெரியோ
யெனக்கின் றருகு மென்று
மனக்கினி யாயினி மற்றது மொழியே.

வி - ம். மதிநுதல் பாகனுகி - சந்திரனைப்போலத் திருநெற்றியினையுடைய பரமேஸ்வரியை யொருபாசத்திலே வைத்திருக்கப்பட்ட தேவரீர்,—நதிதர வெண்ணெய்த்தோன்றி-அடியேனுக்கு மோக்ஷத்தைத்தருவது பொருட்டாகத் திருவெண்ணெய் நல்லூரிலே திருவவதாரஞ்செய்தருளி —நண்ணியுள்புகுந்து - அடியேனிடத்திலே வந்துபொருந்தி,—என்னுளம் வெளிசெய்து - அடியேனிடத் துண்டாகிய வஞ்ஞானத்தைநீக்கிச் சிவஞானத்தைப் பிரகாசிப்பித்து,—உன்னளவில் காட்சிக்காட்டி ஆன்மபோதத்தா லளவுபடுத்த வொண்ணாத வுன்னுடை வியல்பினையு மடியேனுக்குத் தரிசனப்படுத்தி,—எற்காட்டினை - அடியேனுடைய வியல்பினையுந் தரிசனப்படுத்தினாய்,—எனினே - அப்படி தரிசனப்படுத்தினா யானாலும்,—காட்டியென் னுண்மை

யும் பெருமையு நுவலில் - தேவரீ ரறுதிப்படுத்தி யருளிச்செய் யப்பட்ட வடியேனுடைய நேர்மையும் பெருத்த வியாத்தத்தை யும் விண்ணப்பஞ் செய்யுமிடத்து,—அண்ணல்; பாதாளசத்தி பரியந்தமாக - தம்பிரானே, பாதாளசத்தி முடிவாக,—ஓதியுண ர்ந்த யானேயேக முழுத்துநின்றனனே-நூல்களைக் கற்றறிந்தடி யே னறிவுசென் றறியப்பட்ட விடமெல்லா மடியேன்முனே முழுவதும் வியாத்தமாய் நின்றதுண்டே,—முதல்வ - சர்வான் மாக்களுக்கு மொருமுதலாக நின்றுணர்த்துகிற கத்தாவே,— முழுத்தும் - அப்படி யோதியுணர்ந்த விடமெங்கு மடியேன் வியாத்தமா யிருக்கச்செய்தேயும்,—புலன்கடைப் பூழைநுழைந் தனன்-ஒன்றை யறியுமிடத்துச் சோத்திராதிகளாயுள்ள வற்பத் துவாரங்களாகிய புலன்களோடுங்கூடி யறிந்தேன். அன்றியும்,- கலங்கியாங் கைந்தவத்தையு மடைந்தனன் - அடியேனறிகிற வறிவையும் விட்டு மயங்கிய விடத்திலே சாக்கிரஞ் சொப்பனஞ் சுழுத்தி துரியந்துரியாதீத மென்னப்பட்ட வைந்தவத்தையும் பட்டுநின்றேன். அன்றியும்,—நீங்கிப் போக்குவரவு புரிந்தனன்- அப்படிக்கூடி வாதனைசெய்து நிற்கிற சரீரத்தையும்விட்டு நீங்கி மீளவுமொவ்வொரு சரீரத்தையும் வந்தெடுப்பதுஞ் செய்தேன்,- தூக்கி - இவையிற்றைத் திருவுள்ளத்திலே யாராய்ந்து பார்த்த ருளி,—எவ்விடத்துண்மையும் - அடியே னோதியுணர்ந்த விட மெங்கு மடியேன் வியாத்தமாயிருக்கிறதும்,—இவ்விடத்தாலும்- இப்பொழுதிந்தச் சரீரத்தோடுங் கூடிநின்று சீவிக்கிறது மவத் தைப்படுகிறதும்,—செல்லிடத் தெய்தலும் - இந்தச் சரீரதொந் தனைவிட்டுப் புண்ணிய பாவங்களுக் கீடானசுவர்க்க நரகங்களி லே சென்றநுபவிக்கிறதும்,—தெரித்த மூன்றினு ளொன்றெ னக் கருளல்வேண்டும் - தேவரீ ரிவைமூன்று பகுதியினு மிது வாயிருக்கு மான்மாவி னுண்மையென்று ஒன்றை யடியேனுக் குத் தெரிய வருளிச்செய்யவேணும். அப்படி யொன்றைச் சொல்லுகிறதென்ன வவை மூன்றுபகுதியு மான்மாவுக்குடைய

நல்லோவென்று திருவுளஞ் செய்தருளுமானால்,—என்றமில் லதிலதாயுள்ள துளதெனுஞ்சொல்லே சொல்லாய்ச் சொல்லு ங்காலே - எக்காலத்து மொவ்வொன்றி னியல்புகளைச் சொல்லு மிடத்து இல்லதில்லாததே யுள்ளதுள்ளதேயென்று சொல்லுகிற சொல்லே யறுதிப்பட்ட சொல்லாகச் சொல்லுமிடத்து,— சிறுத்தலும் பெருத்தலுமிலவே - ஒருமுதலாயிருக்கப்பட்ட வா ன்மா வோரவதாரத்தி லணுவாகச் சிறுத்து மோரவதாரத்திலே மகத்தாகப் பெருத்தும்வர வழக்கில்லையே. அதுநிற்க,— நிறுத் தியானை யெறும்பினுனதுபோல் - அப்படிச் சிறுத்தும் பெருத் தும் வாரா தெப்பொழுது மொருதன்மையாகிய வியாத்தமாய் நிற்கச்செய்தேயும் யோனிசம்பந்தஞ்செய் 'ததுவதுவாயிருக்கிறது ஆனையாய்நின்ற வான்மா வெறும்பானுற்போலிருக்கும்,—எனி ல் - என்று தேவரீ ரருளிச்செய்யில்,—ஞானமின்றவை காய வாழ்க்கை - தேவரீ ரருளிச்செய்த தடியேன்கேட்ட வறிவல்ல சரீரத்தின் வழக்கைச் சொல்லலாம்,—மற்றவை யடைந்தன வுள - அதனை நாமப்படிச்சொன்னது மறிவாயுள்ள வான் மாக்கள் கன்மத்துக்கேற்ற வொவ்வொரு சரீரங்களோடுங் கூடினு லதற்கதற்குத் தக்கதாக வறிவுசீவித்து நிற்குமென் றே சொன்னோம்,—எனில் - என்றருளிச் செய்யில்,—அற்றன் று - அஃதப்படியன்று, அதென்னென்று கேட்டருளுமாகில், விட்டகுறையினறிந்து தொன்றுதொட்டு வந்தனவேண்டும் - அப்படிக்கூடின யோனிக்குத்தக்க வறிவாயிருக்குமேயானல் முன்னேயெடுத்து விட்டுவந்த யோனிகளை யினனதின்ன தல் லவோவென் றடியேனறியவேணும்· அப்படியல்ல கூடின யோனிக்குத் தக்கதாக வான்மா வறிந்து சீவிக்குமென்று நான்சொன்னது அந்தந்த வவதாரந்தோறு மெடுக்கப்பட்ட சிறியயோனிக்கும் பெரியயோனிச்குந்தக்க வறிவாக வறிந்து சீவிக்கிறதா யிருக்குமென்று தேவரீ ரருளிச்செய்யில்,—நட்ட

பெரியதிற் பெருமையுஞ் சிறியதிற் சிறுமையு முரியது நினக்கே யுண்மை-தேவரீர் கூடினதின் றன்மையென்று காட்டப்பட்ட பெரியயோனிக்குத் தக்கதாகப் பெருத்தவறிவுஞ் சிறியயோனிக் குத் தக்கதாகச் சிறுத்தவறிவு மப்படிவருகிற சுதந்தரமணுவுக் கணுவு மகத்துக்கு மகத்துமாயிருக்கிற தேவரீருக்கேயுள்ளது,— பெரியோம் - மகத்தாயிருக்கப்பட்ட தம்பிரானே,— எனக்கின் றுருகும் - அந்தவழக் கடியேனுக் கில்லைபாம்,—என்றுமனக்கினி யாய்-எக்காலத்து மெம்மனத்துக் கினியையாக விருக்கப்பட்ட தம்பிரானே,—இனி மற்றதுமொழியே-இன்னந் தானுகிலு மடி யேன் முன்னேகேட்ட வினவுக்கு விடையருளிச் செய்யவேண் டும். (க-து.) ஆன்மாவினிய லெப்படியென்னிற் படிகம்போல வடுத்ததின்றன்மையாக விருக்குமென்றும் வசிப்பைப்பற்றின வியாபகமென்று மதுவதுவாய் நிற்பதென்றுஞ் சொல்லப்படும் உ-ம். சிவப்பிரகாசத்தில். ஒரிடத்துணருமுண்மை யொளிதருமு பலம்போலும்'' எ-ம் சித்தியாரில். "வசித்திடவரும்வியாபி யெ னும்வழக்குடையனுகி'' எ-ம். வருவது கண்டுகொள்க, (று-ம்.) அவை மூன்றுபகுதியு மான்மாவுக் குடையதல்லோவென்றுதிரு வுளம் பற்றினதுக்கு. பி-ம். சித்தியாரில். "சூக்கும தேகியாகித் தூலரூபத்தின் மன்னிச், சாக்கிரமுதலர்யுள்ள வவத்தையுட் டங் கியெங்கும், போக்கொடுவரவுமெல்லாம் புரிந்துபுண் ணியங்கள் பாவ, மாக்கியும் பலன்களெல்லா மருந்தியு நிற்குமான்மா. எ-து கண்டுகொள்க, சிறுத்தலும் பெருத்தலு மிலவே. எ-கு. ஒரு முதலாயிருக்கப்பட்ட வான்மா வோரவதரத்தி லணுவாகச் சிறு த்துமோரவதாரத்திலே மகத்தாகப் பெருத்தும்வர வழக்கில்லை. என்று பொருள்கூறியதற்கு. பி-ம், சிவஞானபோதத்தில். "மா யாதனுவிளக்காய் மற்றுள்ளங்காணுதே, லாயாதாமொன்றைய துவதுவாய்'' எ-து. கண்டுகொள்க. மற்றவை யடைந்தனவுள. எ-கு, நாமப்படிச் சொன்னது மறிவாயுள்ள வான்மாக்கள் கண்

க்குக்கேற்ற வொவ்வொரு சரீரங்களோடுகூடி னலதற்கதற்கு த்தக்கதாகவறிவு சீவித்து நிற்குமென்று பொருட்கூறியதற்கு: பி-ம். சிவப்பிரகாசத்தில். ''செறிந்திடு முடலூண்மன்னிச் சேர்பு லன் வாயில்பற்றி, யறிந்திலழுந்தும்'' எ-து. கண்டுகொள்க,

இங்ஙனஞ் சொல்லப்பட்ட வான்மா வவத்தைப்படுமிட த்து ஒரவத்தையைக் கண்டதொழிய மற்றுள்ளவவத்தைநாலு மடியேன லறியப்பட்ட தில்லையேயென்னும் வினமேலருளிச் செய்கின்றது.

மொழிந்த வவத்தை முதலடியே னின்றுங்
கொழிந்தன நான்கு முணர - விழிந்தறிக் [வே
தேறிற்றிங் கில்லை யெழில்வெண் ணெய்மெய்த்தே
தேறிற்றென் கொண்டு தெரித்து.

பி-ம், மொழிந்த வவத்தை-சொல்லப்பட்ட வவத்தைகளந் திலும்;—முதலடியேனின்று- முதலவத்தையாகிய சாக்கிரத்திலே யடியேனின்றதுண்டு,—ஆங்கொழிந்தன நான்கும் அந்தச் சாக் கிரத்தைத்தவிர மற்றுண்டான சொப்பன சுழுத்திதுரியந் துரி யாதீத மென்னப்பட்ட நான்கவத்தையும்,—உணரவிழிந் தறிக் தேறிற்றிங்கில்லை - அடியேனறிவுக்கு நினைவுண்டாம்படி யொவ் வொன்றுக விளங்கினதுமில்லை யறிந்தேனது மிவ்விடத்திற் கண் ட தில்லை,—எழில்வெண்ணெய் மெய்த்தேவே - அழகினையுடைய திருவெண்ணெய்நல்லூரிலே யெழுந்தருளியிருக்கப்பட்ட மெய் கண்ட நாதனே,—தேறிற்றென்கொண்டு தெரித்து - அந்தவவத் தை நாலு முண்டென்று அடியேனுக் கறுதிப்பட்டு வாக்கறுதிவந் தது எந்தப்பிரமாணங்கொண்டறிந்தது. (க-து.) பிறிந்திட லவை ந்தவத்தைப் பெருகிய மலத்தாற் பேணியுறு மாகையாலே சுத்த தத்துவங்க ணீங்கினவிடத்திலே யைந்தவைத்தையும் படுமென் றதுழானப் பிரமாணத்தினலே யறிகவென்றது. (எ)

இங்ஙனஞ் சொல்லப்பட்ட வான்மா வொன்றுண்டென் றதைத் தரிசித்த வழியேதென்னும் வினு மேலருளிச் செய்கின்றது.

தெரித்த தென்கொண்டெனை யுருத்திர பசுபதி
செடியே னேனையு மடிமை செய்யப்
படிவங் கொண்டு வடிவு காட்டில்லாப்
பெண்ணை யாளும் வெண்ணெய் மெய்ய
வவத்தையிற் றெரித்தன னுயி னவத்தை
தெரிந்தாங் கிருத்தலு மிலனே திருத்துங்
கால முதலிய கருவி யாயின
மாலும் பிரமனும் வந்தெனை யடையா
ரோதுங் காலை யொன்றையொன் றுணரா
சேதன மன்றவை பேதைச் செயலிச்
சேதன வானற் செயல்கொள வேண்டேற்
போதன மிவற்றைப் புணர்வதை யறியேன்
கருவித் திரளினுங் காண்பதோ ரொன்று
யொருவுவ தறியே னுணர்வில னுதலி
னிற்கொடு கண்டன னுயினெற்குக்
கருவி யாயினை பெருமையு மிலவே
யானே பிரமங் கோனே வேண்டா
வின்னுங் கேண்மோ மன்ன நின்னின்
முன்னே மென்ற னுணர்வில னுதலி
னென்னைக் காண்பினுங் காண்பல காணு
துன்னைக் காண்பினுங் காண்பல வுன்னே
டொருங்கு காண்பினுங் காண்பல வருக்துணை ன் புளி.

கண்டவாறே தெனது கண்ணே
யண்ட வாண வருட்பெருங் கடலே.

வி - ம். தெரித்ததென் கொண்டனை யுருத்திரபசுபதி செடியனேனையு மடிமைசெய்யப் படிவங்கொண்டு வடிவுகாட்டில்லாப் பெண்ணையாளும் வெண்ணெய்மெய்ய. அநுவயம். உருத்திரபசுபதி - உருத்திரமூர்த்தியுமா யான்மாக்களுக் கெல்லாமுயிர்க்குயிராய் நின்றிரக்ஷித்தருளுகிற கத்தாவாயிருக்கப்பட்டவனே,—செடியனேனை-முடலை யாக்கையோடுங்கூடிச் சநநமரண துக்கத்திலே கிடந்தழுந்துகிற பாவியாயிருக்கப்பட்ட வென்னையும்,—அடிமைசெய்யப் படிவங்கொண்டு - தேவரீர் திருவடிக் குரித்தாக்கிக் கொள்ளவேண்டி யடியேனைப்போல வடிவை யெடுத்துக்கொண்டு,—வடிவுகாட்டில்லாப் * பெண்ணையாளும் வெண்ணெய்மெய்ய -தேவரீருக் குண்டாயிருக்கப்பட்ட வுண்மைவடிவை யொருவருக்குங் காட்டாத நீபெண்ணையாற்றை யாட்சியாகவுடைய திருவெண்ணெய்நல்லூரிலே யெழுந்தருளி யிருக்கப்பட்ட மெய்கண்ட நாதனே,—தெரித்ததென்கொண்டனை - அடியேனென் னுருமுதலுண் டென்கிறதை யறியப்பட்டதேது பிரகாரமென் றருளிச்செய்யவேணும்—அவத்தையிற் றெரித்தனனாயின் - அடியேன் சாக்கிராதி பஞ்சவத்தைப்பட்டு வருகையினாலே யதுகொண்டே யடியேனென்னுரு முதலை யறியப்பட்டதென் றருளிச் செய்யுமாயில்,—அவத்தைத் தெரிந்தாங் கிருத்தலு மிலனே - அடியே னப்படியவத்தைப்பட்டு வருகிறதேயுண்டாமாகி லப்படி மறைக்கப்பட்டுவருகிற வந்தவவத்தையு மின்னதின்னதென்று கண்டு அவ்விடங்களிலே யவற்றை யடியேனறிந்து நீக்கிக்கொண்டேனு

* பெண்ணையாளும் என்றதைப் பண்ணையாள எனப்பாடமோதி பண்ணையாளாக நின்றவடியேனை யேவற்பணி கொள்ளப்பட்டவனே என்று பொருள் கூறுவாருமுளர்,

மில்லே,—இருத்துங் காலமுதலிய கருவியாயின் - அப்படி யந் தவவத்தையின் மறைப்பை நீக்குகிறது காலநியதி முதலிய கருவிகளென் றருளிச்செய்யுமாகில்,— மாலும் பிரமனும் வந் தெனேயடையார் - அப்பொழுது சிருட்டிக்குந் திதிக்குங் கத் தாவாயிருக்கப்பட்ட பிரமனும் விஷ்ணுவு மடியேனைக்கூடி நின் றுணர்த்துகிறதில்லையாம். அன்றியும்,—ஓதுங்காலே யொ ன்னறயொன்றுணரா - அந்தக் கருவிகளியல்பைச் சொல்லுமி டத்து ஒருகருவியை யொருகருவி யறியாது. அன்றியும்,— சேதனமன்றவை பேதைச்செயல் - அந்தக் கருவிகளறிவுள்ள தல்ல வறியாமையாயிருப்பதோர்செயல் அப்படியல்ல ஆன்மா வறியா யிருப்பதுகொண்டு அந்தக் கருவிகளோடெங்கூடி லவை, சேட்டைப்படுமென் றருளிச் செய்யில்,—இச்சேதனவாறு செயல்கொளவேண்டு நற்போத மிவற்றைப் புணர்வதை யறி யேன் - அப்படி யடியேனறியும் பகுதிக்குரியவனுமா யந்தக் கருவிகளின் பயனைக் கொள்ளத்தக்கவனுமாயிருக்கி லடியேனு டைய வறிவு அந்தக்கருவிகளைக் கூட்டுகிறதை யறிகின்றேனி ல்லே. அன்றியும்,—கருவித்திரளினுங் காண்பதோரென்ருய் - அந்தக் கருவிகளெல்லாங்கூடின சாக்கிரத்தானத்திலுஞ் சத்தா திவிடயங்களை யறியுயிடத்து ஒவ்வொன்ருக வறிகிறதொழிந் தைந்தையு மொக்கவறிகின்றதில்லே. அன்றியும்,—ஒருவுவதறி யே னுணர்விலனுதலின் - அப்படி நின்று சீவிக்கிறவவதரத்து அந்தக் கருவிக ணீங்குகிறதையு மறிகின்றேனில்லே. அறிவில் லாதவனுகையாலே யெப்படி யோரொன்றினை யறியுமிடத்து நீயாகத் தனித்தொன்றைபு மறியமாட்டாய் நாமறிவித்தா லறி வையென் றருளிச்செய்யில்,—நிற்கொடுகண்டன ஞயினெற் குக் கருவியாயினை பெருமையுமிலவே - அப்படி யடியேனறி கிறதெல்லாந் தேவரீ ரறிவித்தா லறிவே னுமாகி லப்பொழுது தேவரீரா யடியேனுக்குக் கருவியென்று சொல்லப்படும் கத் தாவென்கிற பெருமையுந் தேவரீருக்கில்லையாம் ஆகையாலே

யானேபிரமங் கோனேவேண்டா - அடியேன்றனே கத்தாவெ ன்று சொல்லப்படும், தேவரீரையடியேனுக்குக் கத்தாவென்ன வேண்டுவது மில்லை. அதுவன்றியும்,—இன்னுங் கேண்மோ மன்ன - தம்பிரானே யடியேன் விண்ணப்பஞ் செய்யத்தக்க தின்னமு மொன்றுண்டு அதுவேதென்று தேவரீர் கேட்டரு ளுமாகில்;—நின்னின் முன்னமென்ற றுணர்வில ரைதலின் - அப்படித் தேவரீரறிவிக்க வடியே னறிந்தேனுமாகில் அங்ஙன நின்றறிவிக்கிற தேவரீரை யெதிர்பட்டுநின்று இதுவல்லோ நம்மை யறிவிக்கிற முதலென்று அறியமாட்டுகிறே னில்லை அடியே னறிவில்லாதவ னாகையினாலே, என்னவே யிரண்டாய் நிற்கலாகாதென்பது கருத்து,—என்னைக் காண்பினுங் காண்ப லகாணு துன்னைக்காண்பினுங் காண்பலவுன்னோ டொருங்கு காண்பினுங் காண்பல-இரண்டா யிப்படிநின் றடியேனை யறிய வென்றாலு மறியப்படும் பகுதியுமில்லை. அது வன்றியுந் தேவ ரீரை யறியவென்றாலு மறியப்படும் பகுதியுமில்லை. தேவரீ ரோடு மடியேனுங்கூடி யறியவேணு மென்றாலு மறியப்படும் பகுதியுமில்லை,— அருந்துணைக்கண்ட வாறேதெனது கண் ணேயண்டவாண வருட்பெருங்கடலே. என்பதனைப் பொரு ளுக்கேற்க மாறிக்கொள்க. பொருளாவது. அடியேனுக் கரிய துணையா யிருக்கப்பட்டவனே, அடியேனுக் கறிவாகிய கண் ணாயிருக்கப்பட்டவனே, தேவர்களுக்கும் கத்தாவா யிருக்கப் பட்டவனே, அருளமுத வெள்ளத்தை நின் னடியவர்க்குக் கொடுத்தருளுகிற சமுத்திரமா யிருக்கப்பட்டவனே, யடியே னென்னைத் தரிசிக்கப்பட்டது எது பிரகாரங்கொண்டு. (க-து.) இப்படி கிருபை தாத்பரியமாய்த் திருமேனிகொண்டு ஆன் மா தனக்குச் சுதந்தரமில்லை யென்கிறதை யறிந்து தானந்த ஞானமாய் நிற்கவே தன்னைத் தரிசிக்கலாமென்று அருளிய விடத்தன்றி யானறியும் பகுதி யொன்றுமில்லை யென்பதாம். ஆன்மாதனக்குச் சுதந்தரமில்லை யென்கிறதையறிந்து தானந்த

ஞானமாய் நிற்கவே தன்னைத் தரிசிக்கலாமென் றதற்கு. உ-ம்
சிவப்பிரகாசத்தில். " தன்னறிவதனாலேதுந் தனக்கறிவில்லை
யேனுந் ,தன்னறிவாகவெல்லாந் தனித்தனிப்பயனருந்துந் தன்
னறிவறியுந்தன்மைதன்னாலேதனையறிந்தாற், றன்னையுந்தானே
காணுந் தானதுவாகின்றே". எ-ம். பட்டணத்துப் பிள்ளை
யார் திருவிடைமருதூர் மும்மணிக்கோவையில். " மாயப்பட
லங்கீறித்தூய, ஞானநாட்டம் பெற்றனன் பெற்றபின், னின்
பெருந்தன்மையுங் கண்டேன்காண்டலு, மென்னையுங் கண்
டேன் பிறரையுங்கண்டே, னின்னிலையனைத்தினுங் கண்டே
னென்னை". எ-ம். சித்தியாரில் " அடிஞானமான்மாவிற் றோ
ன்றுந்தோன்றத் தூரியனுஞ்சிவந்தோன்றத்தானுந்தோன்றும்"
எ-ம். கண்டுகொள்க. (நு-ம்) அவத்தையிற் றெரித்தனனாயின்.
எ-கு. சாக்கிராதி பஞ்சவத்தைப்பட்டு வருகையினாலே யது
கொண்டே யடியேனென்றொரு முதலை யறியப்பட்டதென்று
பொருள்கூறியதற்கு. பி-ம், சித்தியாரில். படையொடுபவனி
போதும் பார்மன்னன் புகும்போதில்லிற், கடைதொறும் விட்
டுவிட்டுக் காவலுமிட்டுப்பின்னை, யடைதருந்தனியேயந்தப் புர
த்தினிலதுபோலான்மா, வுடலினிலவத்தையைந்து முறுமுயிர்
க்காவலாக" எ-து. கண்டுகொள்க. திருத்துங்கால முதலிய
கருவியாயின். எ-கு அப்படி யந்தவவத்தையின் மறைப்பை
நீங்குகிறது காலநியதி முதலிய கருவிகளென்று பொருட்கூறி
யதற்கு. பி-ம். சிவப்பிரகாசத்தில். " இத்தகையையிறையரு
ளா லுயிரறியுமறிவுக் கீடாகவாடாதே யீரிரண்டாலுரைத்த, வித்
தைமுதலைவரான் விளங்குஞான மேவியிடுமெனவுரைப்பரசுத்
தமாயை, வைத்தகலைதான்மூல மலஞ்சிறிதேநீக்கி மருவும்வ
கைதெரிவிக்கும் வாயில்களின் பயனைப், புத்திதரவித்தைவி
டை நின்றறிவையுயிர்க்குப் பொருந்தியிடும் வகைபுணரும்
புனிதசத்தி புணர்ந்தே" எ-து கண்டுகொள்க. ஆன்மா வறி
வாயிருப்பதுகொண்டு அந்தக் கருவிகளோடுங்கூடி லவைநே

ட்டைப்படுமென் றருளியதற்கு. பி-ம். சிவப்பிரகாசத்தில். "தனக்கெனவறிவிலாதான் றத்துவவன்னரூபன், றனக்கெனவ றிவானுவிச் சகலமுநுகருந்தானே" எ-ம். கண்டுகொள்க. அ றிவில்லாதவனுகையாலே யப்படி யோரொன்றினை யறியுமிடத்து நீயாகத் தனித்தொன்றையு மறியமாட்டாய் நாமறிவித்தால றிவையென் றருளிச்செய்ததற்கு. பி-ம். சிவப்பிரகாசத்தில் "இருணனியிரவிதான்வந் திரித்தலுமிரவிலென்னும் பொருணி லைகண்டுமாந்தர் பொருந்திடுமாறுபோல, மருணிலையெங்குநீங்க மகிழ்ந்துயிர்தன்னுண்மன்னு. மருளையுமொழியஞாலத் தறிந்த வாறறியுமன்றே. எ-து. கண்டுகொள்க. (அ)

இங்ஙனஞ் சொல்லப்பட்டு வருகிறவான்மா மூலாதாரத்தி லேயொடுங்கி யதீதப்பட்டுக் கிடக்கு மவதரத்துணரு முறைமை யெப்படியென்னும் வினுமே லருளிச்செய்கின்றது.

கடலமுதே வெண்ணெய்க் கரும்பேயென் கண்ணே
யுடலகத்து மூலத் தொடுங்கச் - சடலக்
கருவியா தாங்குணர்த்தக் காண்பதுதா னென்னை
மருவியா தென்றுரைக்க மன்.

வி-ம். கடலமுதேவெண்ணெய்க் கரும்பே - சமுத்திரத்தி லுண்டாக்கப்பட்ட வமுதம்போலவுந் திருவெண்ணைநல்லூரி லே யுண்டாயிருக்கப்பட்ட கரும்புபோலவு மினியவனே,—என் கண்ணே - அடியேனுக்குக் காட்டாயிருக்கப்பட்ட கண்போலவு ரியவனே அடியே னவத்தைப்படு மவதரத்து,—உடலகத்துமூல த்தொடுங்க - சரீரத்துக்குள்ளே மூலாதாரத்திலே யொருகருவிக ளுங் கூடாம லதீதப்பட்டுக் கிடக்கிற வவதரத்தடியே னுணரு கைக்கு,—சடலக்கருவியா தாங்குணர்த்த - சரீரக்கூட்டமாகி ன்றுணர்த்தின கருவியெது சடக்கென விரைவிலேயுணர,—கா ண்பதுதா னென்னைமருவி - அடியேனறிகிறது தானெதுடன்

கூடி,—யாதென்றுரைக்கமன் - தேவரீரடியேன் விண்ணப்பஞ் செய்தற்கிது வென்றுவிளங்கவருளிச்செய்தருளவேண்டும் (க-து) ஆன்மதத்துவம்-உ௪, வித்தியாதத்துவம்-எ. சிவதத்துவம்-௫. இவற்றிற்குமுறையே போககாண்ட மென்றும் போக்கிய காண்டமென்றும் பிரேரகாண்டமென்றும் பெயர். இவற்றுள் ஆன்மதத்துவம்-உ௪-ம். உட்கருவியும் புறக்கருவியுமாய்த் தேகமாய்ப்பொருந்திச் சிவதத்துவங்கள் கலாதிகளைப்பிரேரித்து அறிவிக்குமென்பதாம். உ-ம். சித்தியாரில். "வாயாதிசோத்திராதி புறத்துவாழ்கருவியாகு, மேயாதமனுதிகாயத் துணருமுட்கருவியாகு, மாய்வார்கட்கராகமாதி யவற்றினுட்கருவியென்பர்; மாயாடன்வயிற்றிவற்குற் றுடக்குண்டுவாழுமான்மா" எ-ம். போற்றிப்ப·ஃறொடையில், "மூலவருங்கட்டி லுயிர் மூடமாயுட்கிடப்பக், காலநியதிகாட்டி - மேலோங்கு முந்திவியன்கட்டி லுயிர்சேர்த்துக் கலைவித்தை, யந்தவராக மவைமுன்பு—தந்த, தொழிலறிவிச்சை துணையாகமானி, னெழிலுடைய முக்குணமுமெய்தி - மருளோடு, மன்னுமிதயத்துச் சித்தத்தாற் கண்டபொரு, ளின்னபொருளென் றியம்பவொண்ணு - வந்நிலைபோய்; கண்டவியன்கட்டிற் கருவிகளீரைந்தொழியக், கொண்டுநியமித்தற்றை நாட்கொடுப்பப்-பண்டை, யிருவினையான்முன்புள்ள வின்பதுன்பங்கண், மருவும்வகையங்கே மருவி". எ-ம். சொன்ன முறைமைகளைக் கண்டுகொள்க. (௯)

இங்ஙனஞ் சரீரதொந்தனைப்பட்டு நிற்கிற வடியேனுக்குத் தேவரீர் தீக்ஷாக்கிரமங்களிலே பாசமோசனம் பண்ணியிருக்கவு மடியேன் மீளவு மலமாயாதி கன்மங்களோடு தொந்தித்து நிற்கைக்கு வழியேதென்னும் வினுமே லருளிச்செய்கின்றது.

மன்னிய கன்பச் சமத்திடை மலங்களை
யந்நிய மாக்கி யருள்வழி யதனு

லென்னுள் புகுந்தனை யெனினே முன்னைத்
திரிமலந் தீர்த்த தேசிக னின்னோ
டொருவுத லின்றி யுடந்தையே யாகும்
பெருநிலை யாகல் வேண்டு மருவிடு
மும்மல மதனை லெம்முனின் றிலையெனி
னம்மலத் திரிவுஞ் செம்மலர்த் தாணிழற்
சேர்தலு மிலவாய்ச் சார்பவை பற்றிப்
பெயர்வில னாகும் பெரும தீர்வின்
றமைந்த கருமத் தியைந்தவை யல்லது
சமைந்தன விலவெனச் சாற்றின மைந்த
மாயையங் கன்ம மாமல மூன்று
மாயா தாகவே யார்ச்சக மாயையி
னுற்பவந் தீரா தொழூகுமொன் றென்றி
னிற்சம மாயி னல்லது நிற்பெற
வில்லென மொழிந்த தொல்லறந் தனக்கு
மேயா தாகு நாயே னுளத்து
நின்றனை யென்பனோ நின்றிலை யென்பனோ
பொன்றிய பொன்றிற் றிலமல மென்பனோ
வொன்றினை யுரைத்தருண் மன்ற குன்றுப்
பெண்ணைப் புனல்வயல் வெண்ணெய்க் கதிபதி
கைகண் டலைவாய் காலசெவி மூக்குயர்
மெய்கொண் டென்வினை வேறப் பறித்த
மெய்கண்ட தேவே வினையிலி
மைகொண்ட கண்ட வழுவிலென் மதியே.

வி-ம். மன்னியகன்மச் சமத்திடை மலங்களை யக்கியமாகி
இ அர்ாதியே யடியேனேடுங்கூடி நிலைபெற்றுவருகிற கன்மமா கி

யபுண்ணியபாவங்கள் தன்னிற்சமமாகத் துலையொத்த வவதரத்து அடியேனோடுங் கூடியிருக்கப்பட்ட மலங்களைத் தேவரீர் தீக்ஷாக்கிரமங்களினாலே வேறுபடுத்தி,—அருள்வழியதனா லென்னுள் புகுந்தனையெனினே - தேவரீரநுக்கிரகத்தின் முறைமையாலே யடியேனுள்ளத்திலே யெழுந்தருளினதே யுண்டாமாகில்,—முன்னைத் திரிமலந் தீர்த்ததேசிக நின்னோடுருவுத லின்றியுடந்தையேயாகும் பெருநிலை யாகல்வேண்டும் - குருமூர்த்தியாயிருக்கப்பட்ட தம்பிரானே யடியேனுக் கநாதியாயிருக்கப்பட்ட மூன்றுமலங்களையுநீக்கின் தேவரீரை யடியேன்விட்டு நீங்காமலுடந்தையாய்க் கலந்து நிற்கும்பேரின்பமாகிய திருவருட்பிரகாசமுண்டாகவேண்டும், அது நிற்க, முன்னே யென்னிடத்தில் தேவரீரில்லையாம்,—மருவிடுமும்மல மதனாலெம்மு ணின்றிலையெனில் அடியேனோடு கூடிவருகிற வாணவமாயை காமியமென்னு மூன்று மலங்களினோடும் வாதனைசெய்து நிற்கையினாலே யடியேனுள்ளத்திலே தேவரீரெழுந்தருளி நின்றதில்லையாமாகில்,—அம்மலத்திரிவுஞ் செம்மலர்த்தாணிழல் சேர்தலுமிலவாய்ச் சார்பவைபற்றிப் பெயர்விலனாகும் பெருமதிர்வு - அந்தமலங்களைத் தேவரீர் போக்கினது மில்லையா? யடியேனுஞ் சிவந்த தாமரை மலர்போன்ற ஸ்ரீபாதத்திலே வந்துபொருந்தினது மில்லையாய்ப் பிரபஞ்சவாதனையாலே வந்துபொருந்தின கன்மங்களைப்புசித்து அதனாலே புண்ணிய பாவங்களிற் கட்டுப்பட்டுச் சநநமரண துக்கத்தைவிட்டு நீங்குகைக்கு வழியில்லாதவனாகும். தம்பிரானே யிதுநிச்சயம் தப்பாது. அப்படியல்ல,—இன்றமைந்த கருமத் தியைந்தவை யல்லது சமைந்தன வில்லெனச்சாற்றின் - இப்பொழு தடியேனெடுத்தவுடலுக் கடுத்த பிராரத்துவ மநுபவிக்கிறதொழிய மேலுடலெடுக்கைக்குள்ள வாகாமியகன்மமேருதென்றருளிச்செய்யில்,—அமைந்த மாயேயங்கன்ம மாமலமூன்று 'மயாது - அடியேனுக்கமைந்த பிராரத்துவத்துக்கீடாகவெடுத்த மாயமேயென்னப்பட்ட காரியமாகியுடலுள்ளளவு மதன்

காரணமாகிய மாயைபோகாது, மாயையுண்டாகவே கன்மமும் போகாது, அப்படி மாயையுங் கன்மமு முண்டாகவே யாணவமலமுண்டெனப்படும்,—ஆகவே யார்ச்சகமாயையி னுற்பவந் தீராதொழுகும் - ஆக விங்ஙன மூன்று மலங்களுமுண்டாகவே யாகாமியங்களை யார்ச்சித்து மாயையின்தோற்றமாயுள்ள சரீர தொந்தனை விடாமல் மென்மேலுந் தொன்றுதொட்டு வரும். அன்றியும்.—ஒன்றொன்றினிற் சமமாயினல்லது நிற்பெறலில் லென லொழிந்த தொல்லறந் தனக்குமேயாதாகும் - இருவினை யாகிய புண்ணிய பாவங்களொன்றுக்கொன்று தம்மிற் சமமாகத் துலையொத்தாலொழியத் தேவரீரை யடியார் பெறுகிறதில்லையென்று சொல்லப்பட்ட பகையதாகிய சிவசாத்திரத்துத் தன்மமாகிய திருவாக்கும் பொருந்தாது, ஆகையால்,—நாயே னுளத் துநின்றனை யென்பனோ நின்றிலையென்பனோ பொன்றியபொன்றிற் றிலமல மென்பனோ வொன்றினை யுரைத்தருண்மன்ற - அடியேனுள்ளத்துத் தேவரீர் கூடிநின்றதென்று விண்ணப்பஞ் செய்வனோ அந்த மலங்கள் கெட்டுப்போனதென்று விண்ணப்பஞ்செய்வனோ கெடாமல் நின்றதென்று விண்ணப்பஞ்செய்வனோ யிவை யிற்றிலொன்றை யருளிச்செய்தருள் அடியேனுக் சறுதிப்பட,—குன்றாப்பெண்ணைப் புனல் வயல்வெண்ணெய்க் கதிபதி - வளப்பங்கள் குறைவுபடாத பெண்ணையாற்றுநீர் பாயப்பட்ட வயல்களையுடைய திருவெண்ணெய்நல்லூருக்குக் கர்த்தாவாயிருக்கப்பட்டவனே,—கைகண் டலைவாய்க்கால் செவிமூக்குயர் மெய்கொண் டென்வினை வேரறப்பறித்த மெய்கண்டதேவே - கரசரணாதியாயுள்ள வவயவங்களோடுங்கூடி யிருக்கப்பட்ட திருமேனி யெடுத்துக்கொண்டு அடியேனுக்குண்டாகிய கன்மங்களைக்கிளைப்பறப் பறித்துப்போட்ட மெய்கண்டதேவனே,—வினையிலி - அப்படி ரூபீகரித்திருக்கச்செய்தேயுங் கன்ம தொந்தனை யில்லாதவனே,—மைகொண்டகண்ட - நஞ்சமாகிய கறுப்பினைக் கண்டத்திற்றரித்தருளின கறைமிடற்றனே,—வழு

விலென்மதியே - அடியேனுக்குக் குற்றமற்ற வறிவாயிருக்கப் பட்ட தம்பிரானே யிவ்வினைத்தன்மை யெனக்கருள்வாய். (க-து,) ஒருருக்கிருவழிப்பகுதி தோன்றினவிடத்துச் செல்வானுக்குத் திகைப்புண்டானாற்போலக் கன்மக் துலையொப்பிலே சத்திக்குத்திகைப்புவரும், அதுவே சத்தி தன்தொழில் செலுத்தற்கிருத்தலாம். அவ்வவதரந் தேவரீரறிவதல்லது யாவரறிவரென்பதாம், (து-ம்.) அடியேனோடு கூடியிருக்கப்பட்ட மலங்களைத் திக்ஷாக்கிரமங்களினாலே வேறுபடுத்தித் தேவரீரநுக்கிரகத்தின் முறைமையாலே யடியேனுள்ளத்திலே யெழுந்தருளினதே யுண்டாமாகில் என்பதற்கு. பி-ம். சித்தியாரில் "சகலர்க்குக் கன்மவொப்பில், தனையிலாசான் மூர்த்தி யாதாரமாகித் தரித்தொழிப்பன்மலஞ் சதுர்த்தாசத்திநிபாதத்தால்." எ-ம். "நிறுத்துவதோர் குணமில்லான்றன்னை யொருவருக்கும் நினைப்பரியானென்று மிலானேர்படவந்துள்ளே, பொருப்பரிய பேரன்பை யருளிய தன்வழியே புகுந்திடுவனெங்குமிலாப் போகத்தைப்புரிந்தே." எ-ம். கண்டுகொள்க. மருவிடுமும்மலமதனைலெம்முனணின்றிலையெனில் - அடியேனோடுகூடிவருகிற ஆணவமாயை காமியமென்னு மூன்றுமலங்களினோடும்வாதனைசெய்து நிற்கையினாலே யடியேனுள்ளத்திலே தேவரீரெழுந்தருளி நின்றநிலையாம் என்று பொருள்கூறியதற்கு. பி-ம். சிவஞானபோதத்திலே. "அருக்கனேர் நிற்பினுமல்லிருளே காணார்க், கிருட்கண்ணே பாசத்தார்க்கீசன்" எ-ம். "தன்னுணர்வு, நேசத்தர் தம்பானிகழுந்திநெய்போற், பாசத்தார்க்கின்றும்பதி." எ-ம். போற்றிப் பஃறொடையில், "என்னுள்ளமென்று நீங்காதொளித்திருந்து." எ-ம், கண்டுகொள்க. இன்றமைந்த கருமத்தியைந்தவையல்லது சமைந்தன விலவெனச்சாற்றின். எ-கு இப்பொழு தடியேனெடுத்த வுடலுக்கடுத்த பிராரத்துவமநுபவிக்கிற தொழியமேலுட லெடுக்கைக்குள்ள வாகாமியகன்ம மேறுதென்றருளிச்செய்யில் என்றுபொருள்கூறியதற்கு - திருவருட்பு

யினில். "என்றவினையுடலோடேகு மிடையேறுவினை, தோன்றி லருளே சுடும்." எ-ம், சிவப்பிரகாசத்தில். தொல்லையில்வரு தல்போலத் தோன்றிரு வினையதுண்டேல், அல்லொளிபுரையு ஞானத்தழகுற வழிந்துபோமே." எ-ம். சித்தியாரில். "என்ற வுடல்கன்மமநுபவத்தி ெலறுத்திங்கினிச் செய்கன்ம மூலமல ஞானத்தாலிடிப்பன்." எ-ம். சிவஞானபோதத்தில். "பின் செய்வினைமாயை யுடனில்லாது." எ-ம். கண்டுகொள்க. அமைந்தமாயேயங் கன்மமாமல மூன்றுமாயாது. எ-கு. அடி யேனுக்கமைந்த பிராரத்துவக் கீடாகவெடுத்த மாயேய மென் னப்பட்ட காரியமாகி யுடலுள்ளளவு மதனகாரணமாகிய மாயை போகாது; மாயையுண்டாகவே கன்மமும்போகாது அப்படி மாயையும் கன்மமும் உண்டாகவே யாணவமல முண்டெனப் படும் என்று பொருள்கூறியதற்கு. பி-ம். சித்தியாரில், "அங் கித்தம்பனைவல்லார்க் கனல்சுடாதாகு மௌடதமந்திர முடை யார்க் கருவிடங்களேறு, வெங்கித்தைக் கன்மமெலாஞ் செய் தாலு ஞானிக்கிருவினைகள் சென்றணையா முற்செய்வினையீங் குத். தங்கிப்போம் பாத்திரமுங்குலாலன் வினைதவிர்ந்த சக்க ரமுங்கந்தித்துச் சுழலுமாபோன், மங்கிப்போய் வாதனையா லுழல்விக்கு மெல்லா மலங்களும் பின்காயமொடுமொடு மாயு மன்றே." எ-ம். வாதனுதோஷத்தினலே யக்கினியைச் சேர்ந்த வித்தைப்போலவு மாயன் வெட்டின மரம்போலவும் புடம் பண்ணின பணம்போலவும் வெந்த படம்போலவும் உருவ மாத்திரமல்லாமல் பெந்தமில்லையாகையால் காரணமலங்களுஞ் சரீரத்தோடு தேய்ந்தறுமென்றது கருத்து. தேவரீரையடியார் பெறுகிறதில்லையென்று சொல்லப்பட்ட பழையதாகிய சிவசாத் திரத்துத் தன்மமாகிய திருவாக்கும்பொருந்தாது. எ-ரு. கருத் தாவது புண்ணியபாவமொன்று சமத்துவமானலல்லோ தேவ ரீரைப்பெறுவதென்று சொன்ன பழைய திருவாக்கு புண்ணிய பாவத்துக்கேற்ற தேகமிற்கவே வினையொத்த தெப்படியென்று

சிஷன் வினயதற்கு இருவினையொப்புக்குச் சரீரமுன்னிலை யல்ல புண்ணியத்திலேயும் பாவத்திலேயு மிரண்டிலேயுஞ் சம மாகவெறுப்புவந்ததே யிருவினையொப்பு அப்போதாசாரிய மூர்த்தமாகவந்து சிவனிரக்ஷிப்பன். இதற்கு. பி-ம். போற்றிப் பஃறொடையில். "எல்லையிரண்டு மிடையொப்பிற் - பல்பிறவி, யத்தமதிலன்றே வளவென்று பார்த்திருந்து, சத்திபதிக்குந்த ரம்போற்றி." எ-து. கண்டுகொள்க. நாயே னுள்ளத்து நின் றனை யென்பனோ நின்றிலையென்பனோ எ-கு அடியேனுள்ளத் தித் தேவரீர்கூடிநின்ற தென்று விண்ணப்பஞ் செய்வனோ கூடிநின்ற தில்லையென்று விண்ணப்பஞ்செய்வனோ என்று பொருள் கூறியதற்கு. பி-ம். சித்தியாரில். "எங்குந்தானெ ன்னினு மெய்தவேண்டா வெங்குமிலனென்னில் வேறிறையு மல்ல, னங்கஞ்சேருயிர்போல்வ னெங்குமங்கத் தவயவங்கள் கண்போல்க்காணுவான்மா, விங்கு நமியம்புந் தத்துவங்களின் வைத்தறிவதிறைஞானந் தந்துதாளீதல் சுடரிழந்த, துங்க விழிச் சோதியு முட்சோதியும் பெற்றாற்போற் சோதிக்குட் சோதியாய்த் தோன்றிடுவன்காணே," எ-து. கண்டுகொள்க. பொன்றியபொன்றிற் றிலமலமென்பனோ. ஏ-கு. அந்தமலங்கள் கெட்டுப்போனதென்று விண்ணப்பஞ் செய்வனோ கெடாமல் நின்றதென்று விண்ணப்பஞ்செய்வனோ என்றுபொருள் கூறி யதற்கு. பி-ம். சித்தியாரில். நெல்லினுக்குத் தவிடுமிகளநாதி யாயு நெல்லைவிட்டு நீங்கியவை நின்றநிலைநிகழ்த்தீர், சொல்லி யிடிற்றுகளற்றவரிசியின் பாவில்லைத் தொக்கிருந்து மற்றொரு நெற்றோற்றிடாவா, மெல்லவினை விடுமறவே யவைபோல வணுவை மேவுமலமுடல் கன்மமநாதிவிட்டேநீங்கு, நல்லசிவ முத்தியின் கட்பெத்தான்மாவை நணுகிநிற்கு மாதலினுஞசமு மின்றுமே." எ-ம். சிவப்பிரகாசத்தில் "அழிந்திடும் பாசமென் னினித்தமென் றுணாத்தல்வேண்டா, வழிந்திடா தென்னின் ஞானமடைவது கருதவேண்டா, வழிந்திடு சத்திநித்த மழிந்திடா வொளியின்முன்ன, ரழிந்திடுமிருளு நாசமடைந்திடாமிடைந்தி டாவே," எ-து, கண்டுகொள்க,

அடியேனறியப்பட்டதெல்லாந் தேவரீர் கூடிநின் றறிவிக்கி றதாக விருக்கவு மடியேனிந்த வஞ்ஞானத்தோடுங் கூடிமயங்கி நிற்கைக்கு வழியேதென்னும் வினமேலருளிச் செய்கின்றது.

மதிநின்பா லிந்த மலத்தின்பா னிற்க
விதியென்கொல் வெண்ணெய்வாழ் மெய்ய-பதிநின்பால்
வந்தா லிதில்வரத்தில் வந்திரண்டும் பற்றுகிலேன்
எந்தா யிரண்டாமா றென்.

வி - ம். மதிநின்பால் - அடியேனுக் குண்டாயிருக்கப்பட் டவறிவு தேவரீர் பகுதியிலே யுண்டானது. அப்படியிருக்கவும், —இந்த மலத்தின்பானிற்க விதியென்கொல் - அடியேனிந்த மலத்தின் பகுதியிலேகூடி மயங்கி நிர்கைக்கு முறைமையேது, —வெண்ணெய்வாழ் மெய்ய - திருவெண்ணெய் நல்லூரிலே யெழுந்தருளியிருக்கப்பட்ட மெய்கண்டநாதனே,—பதிநின்பா ல் வந்தால் - கத்தாவாயிருக்கப்பட்ட தேவரீரையடியேன்வந்து கூடினால்,—இதில் வரத்தில் - இந்தமலத்திலே மீளவருகைக்கு வழக்கில்லை,—வந்திரண்டும் பற்றுகிலேன் - தேவரீரை வந்துகூ டிஞ லந்தவருளோடு மிந்த மலத்தோடுமொக்க நிற்கிற தடியே னுக்குண்டாகாது,—எந்தாயிரண்டா மாறென். அடியேனுக் குச் சுவாமியாயிருக்கப்பட்டவனே அடியேனொருத்தன் தேவரீ ரோடுங் கூடியறிந்து மிந்தமலத்தோடுங்கூடிய யறியாமலுமா யிரண்டோடுங்கூடி யதுவதுவாய் நிற்கைக்குவழக்கேது. (க-து.) அறிவுமிகுத்தவனு மாகாமலறிவில்லாத மூடனுமாகாமல் கதி பெறவேண்டுமென்கிற நடுவர்ந்தன்மையாகியவன் தான்பாசத் திடத்தும் பரத்தினிடத்து மாசைப்பற்றிய பொழுதிரண்டினு மன்றிப்பற்றிய ததுவாய்நிற்பன். (உ-ம்) சித்தியாரில். "பாசி படுகுட்டத்திற் கல்லினை விட்டெறியப்படும் பொழுது நீங்கியது விடும்பொழுதுபரக்கு, மாசுபடு மலமாயை யறுங்கன்ம மனைத் து மரனடியை யுணரும்போதகலும் பின்னணையு நேசமொடுந்

திருவடிக்கீழ் நீங்காதே தூங்கு நினைவுடையோர் நின்றிடுவர் நிலையிதுவேயாகு, மாசையொடு மங்கு மிங்கு மாகிலயும் வருவோ ரரும் பாசமறுக்கும் வகையருளின் வழியுரைப்பாம்.'' எ-து. கண்டுகொள். (து-ம்,) மதிநின்பாலிந்த மலத்தின்பானிற் கவி தியென்சொல். எ-கு, அடியேனுக்குண்டாயிருக்கப்பட்டவறி வு தேவரீர் பகுதியிலே யுண்டாயிருந்து மடியேனிந்த மலத்தி ன் பகுதியிலேகூடி மயங்கி நிற்கைக்கு முறைமையேதென்னும் வினாவுக்குக் கத்தா கன்மத்தின்வழி நடத்துவனென்பதுகருத்து. பி-ம். சிவஞானபோதத்தில். ''அவையே தானேயா யிருவினை யிற், போக்குவரவு புரியவாணையி, னீக்கமின்றி.'' எ-து. கண்டு கொள்க.

(கக)

தேவரீரனவரதமு முயிர்க்குயிராய்நின் றறிவிக்குமென்றி ருக்கையிலே யடியேனோடு மொருகாற்கூடியு மொருகானீங்கி யும் வருகைக்கு வழியேதென்று மாணவகன்கேட்கும் வினமே லருளிச்செய்கின்றது.

எண்டிசை விளங்க விருட்படாம் போக்கி
முண்டக மலர்த்தி மூதறிவருளு
மேதினி யுதய மெய்கண்ட தேவ
கோதிலமுத குணப்பெருங் குன்ற
வென்னி னூர்தலு மகறலு மென்னைகொ
லுன்னிற் றுன்னி யுனுவிடிற் பெயர்குவ
மென்னு மதுவே நின்னியல் பெனினே
வியங்கோ ளாளனு மாகி யியங்கலு
முண்டெனப் படுவை யெண்டோண் முக்கண்
யாங்கணும் பிரியா தோங்கு நின்னிலையின்
யான் வந்தணைந்து மீள்குவ னுயி
னூற்றத் துயருற் றேரணி நிழனசைஇ

வீற்று வீற்றெழுதா வேண்டலும் வெறுத்தலு
மின்றிச் சாபைக்கு நன்றுமன் னியல்பே
யனையை யாகுவை நினைவருங் காலை
யிங்கிலை யதனி னேழையேற் கிரங்கி
நின்னை வெளிப்படுத் தொளிப்பை நீயே
லருண்மா ரூகும் பெருமவஃதன்றியு
நிற்பெற் றவர்க்கு மூற்பவ முண்டெனுஞ்
சொற்பெறு மஃதித் தொல்லுல கில்லை
யவ்வவ் வமைவுஞ் சோர்வு மயர்வறச்
சொல்லிற் சொல்லெதிர் சொல்லாச்
சொல்லை சொல்லுக சொல்லிறந் தோயே.

வி - ம், எண்டிசைவிளங்க விருட்படாம்போக்கி முண்டக மலர்த்தி மூதறிவருளும் - எட்டுத்திக்கிலுமுள்ள வந்தகாரங்களைநீக்கித் தாமரைமுகிழையுமலர்த்து மாதித்தனைப்போல வடியேன் தேவரீரைப்பெற வேண்டுகைக்கு விசாரித்தறியவேண்டும் பகுதிக்கெல்லாம் விளக்கஞ் செய்யத்தக்கதாக வடியேனை மறைக்கப்பட்ட வஞ்ஞானமாகிய போர்வையைநீக்கி யடியேனிருதயகமலத்தையு மலர்த்துவித்தநாதி யாயிருக்கப்பட்ட திருவருளையு மடியேனுக்குக் கடாக்ஷித்தருளிய,—மேதினியுதய - பூமியிலே தோன்றியருளின ஞானுதித்தனே,—மெய்கண்டதேவ - மெய்கண்டதேவனென்கிற திருநாமத்தினையுடையவனே.—கோதிலமுத - குற்றமற்ற வமுதமாயிருக்கப்பட்டவனே,—குணப்பெருங்குன்ற - நற்குணங்களெல்லா முடைய பெரியமலையே, என்னவே மலைபோலும் பெருமையை யுடையவனே,—என்னினூர்தலு மகறலு மென்னைகொல் - எங்கும் பூரணனுயிருக்கிற தேவரீரடியேனோடு மோரவதாரத்திலே கூடியு மோரவதாரத்திலே நீங்கியு நிற்கிறதேது பிரகாரமென் றருளிச்

செய்தருள், கொல் - ஐயர்,—உன்னுற்றன்னி யுனுவிடிற்பெய
ர்குவ மென்னுமதுவே நின்னியல்பெனினே - அப்படித்தேவ
ரீர் கூடியும் பிரிந்து நிற்கிறது அடியேனினைக்கும்பொழுது
கூடியு நினையாதபொழுது நீங்கியுமிருக்கிறதே தேவரீருக்கு மு
றைமையாமென்றருளிச்செய்யில்,—வியங்கோளாளனுமாகி யிய
ங்கனு முண்டெனப்படுவை - அப்பொழுது தேவரீரடியேனு
க் கேவற்றொழில் செய்கிறவனுமாய்ப் பூரணமில்லாத போக்
கு வரவு செய்யப்பட்ட ஏகதேசியென்று சொல்லவும்படும். அப்
படியல்ல நாமசைவறநிற்க நீதானே கூடியும் பிரிந்தும் வருகு
வையென்னில்,—எண்டோன் முக்கண் யாங்கணும் பிரியாதோ
ங்கி நின்னிலையின்யான் வந்தணைந்து மீள்குவனுயின் - எட்டுத்
திருப்புயமு மூன்று திருநயனமு முடைத்தா யெவ்விடமு நீங்
காமலுயர்ந்த நின்னுடைய பூரணநிலையிலே யடியேன் வந்துகூ
டி மீளவும் பிரிவேனுமாகில்,—ஆற்றுத்துயருற்றோ ரணிநிழன
சைஇ வீற்றுவீற்றெழுதர வேண்டலும் வெறுத்தலுமின்றிச் சா
யைக்கு நன்று மன்னியல்பே - வழிநடக்கிறவர்கள் பொடிச்சூ
ட்டினுல் வருத்தப்பட்ட வவதாரத்து அழகிதாகக்குளிர்ந்த நிழ
லுக்காசைப்பட்டுச்சென்று வேண்டத்தக்க விடங்களிலே யிரு
ந்திருந்து போமிடத்து இவர்களிங்ஙனம் வந்திருக்கப்பெற்றதே
யென்கிற பிரியமும் நம்மைவிட்டுப் போனுர்களென்கிற வப்பிரி
யமுமந்த விருக்ஷத்திற் கில்லையானுற்போல வொப்புச் சொல்
லாத தேவரீருக்குண்டான முறைமையுநன்று,— அனையை
யாகுவைநினை வருங்காலே-தேவரீர் சர்வஞ்ஞனென்றிருக்கு மவ
தரத்து மங்ஙனமருளிச் செய்சதே தாம், விசாரிக்கு மிடத்தப்
படியல்ல, நீயுநாமும் போக்குவரவின்றி நின்றநிலை யதனிலே
நீநினைக்கும் பொழுது நாம் பிரகாசித்து நீநினையாதபொழுதம
றைந்துநிற்போமென்னில்—இந்நிலையதனி னேழையேற்கிரங்கி
நின்னை வெளிப்படுத்தொளிப்பைநீயேல் - இப்பொழுதிங்ஙன
நின்றநிலைதன்னிற் கொச்சையுா யிருக்கப்பட்ட வடியேனுக்கா

கக் கிருபைப்ஜநித் தடியேனிடத்திலே யெழுந்தருளி மீளவுமறைந் து நிற்குமாயின்—அருண்மாறுகும் பெரும -தம்பிரானே தேவரீ ரநுக்கிரகவா னென்கிறதற்கு மாறுபாடுண்டாம்—அஃதன்றியும் - அப்படியன்றியும்—நிற்பெற்றவர்க்கு முற்பவமுண்டெனுஞ் சொற்பெறும் - அப்படி யநுக்கிரகவானல்லவென்கிற தன்றியுந் தேவரீர் திருவடியை யடைந்தவர்களுக்கு மீளவும் ஜநநமுண்டெ ன்கிற சொல்லையுமுடைத்தாயிருக்கும்—அஃதித்தொல்லுலகில் லே - அப்படி யநாதியே தொடங்கித் தேவரீர் திருவடியைப்பெ ற்ற பெரியோரொன்று சில ருண்டாகப்போகிறதுமில்லே ; ஆகை யால்—அவ்வவ்வமையும்-அடியேன் விண்ணப்பஞ்செய்யு மந்த தந்த நிறைவும்—சோர்வுமயர்வற - அடியேனுக்கு மயக்கமுந் தீ ரத்தக்கதாக—சொல்லில் - தேவரீரருளிச்செய்யில்—சொல்லெ திர் சொல்லாச் சொல்லேசொல்லுக - அடியேன் மறுத் தெதிரு த்தரம் விண்ணப்பஞ் செய்யாதபடியருளிச்செய்யல்வேண்டும்— சொல்லிறந்தோயே - வாக்கினலுச் சரிதற்கு மப்பாற்பட்ட தம் பிரானே. (க - து.) அவ்வவ்விடந்திலே சிவ னிறைந்திருக்கி றது மான்மாபொருந்தி யிருக்கிறதுமெப்படியென்னில். க-வது. உடலு முயிரும்போலுங் கண்ணுமாதித்தன்போலும் மான்மாவு மான்மக் கியானமும்போலும் விட்டு நீங்காமற் பொருந்தியிருக் கும் அப்படியிருக்க விட்டும் பற்றியும் வருவானேனென்னில் அ நாதியே மலசம்பந்த ஞகையாலே நீ நினைத்த விடத்திலே பிரகா சிப்போம் நினையாதவிடத்திலே நீங்கி நிற்போமென்று திருவுள ம்பற்றினது. உ- வது. விட்டுநீங்காத பரிபூரண நிலையிலே யான் யாவந்து பொருந்தி நீங்குவனென்று சொன்னது மலபோத நீங் கினவிடத்திலே சிவனைப் பொருந்துவனென்றும் போத மேவிட் டகாலத்திலே சிவனையிழந்துநிற்பனெனறுஞ்சொன்னது. ௩-வது: ஏழையாயுள்ள வடிமைக்கிரங்கி யனுக்கிரகம்பண்ணி நிற்பொமெ ன்றது பத்தியினலே வழிபடுகிறவடியார்களுக்கு மதனபீஷ்டந் தீர்த்து நீங்கிநிற்போமென்று திருவுளம்பற்றினது. ஆகையாலே

விட்டும்பற்றியும் வருகிறது மூன்று பிரகரணமாகத் திருவுளம்ப
ற்றினதுங் கண்டுகொள்க (நு-ம்)உன்னிற்றுன்னியு ளுவிடிற்பெய
ர்குவ மென்னுமதுவே நின்னியல்பெனினே. எ-கு. தேவரீர்கூ
டியும்பிரிந்து நிற்கிறது அடியேனினைக்கும்பொழுது கூடியுநினை
யாதபொழுது நீங்கியுமிருக்கிறதே தேவரீருக்கு முறைமையெ
ன்று பொருள் கூறியதற்கு. பி-ம். தேவாரம், "பன்னிலூரும் ப
ழத்திலுமின்சுவை'யென்னிலூறி யெனக்கேகளிதரு, முன்னிலு
ன்னுமுனுவிடில் விட்டிடு, மென்னுளீச னிருந்தவியற்கையே"
எ-து. கண்டுகொள்க. எண்டோண்முக்கண் யாங்கணும் பிரியா
தோங்கிநின்னிலையின் யான்வந்தணைந்து மீள்குவனுயின். எ-கு.
எட்டுத்திருப்புயங்களு மூன்று திருநயனமுமுடைத்தா யெவ்விட
மு நீங்காமலுயர்ந்த நின்னுடைய பூரணநிலையிலே யடியேன்
வந்துகூடி மீளவும் பிரிவேனுமாகில் என்றுபொருள்கூறியதற்
கு. பி-ம். சிவஞானபோதத்தில். ஐம்பொறியினல்லையெனு மந்
நதரசிவனை, "ஐம்பொறியை விட்டங்கணை சகல - னைம்பொ
றியி, னீங்கானீர்ப்பாசிபோ னீங்கி மலகன்மம் வரி, னீங்கா
னைநீங்கு நினைந்து" எ - ம். ஊசல்கயிறற்றூற்றாய் தரையேயா
ம். எ-ம். ஒழிவிலொடுக்கத்தில். 'போதம்பறைப்பறவே பூரண
மாம் பூரணமும், போதம்பறைத்தெழலே பொய்யாகும்," எ-ம்.
கண்டுகொள்க.இந்நிலையதனி னேழையேற்கிரங்கி நின்னைவெளி
ப்படுத்தொளிப்பை நீயேல். எ-கு. இப்பொழுதிங்ஙன நின்றநி
லைதன்னிற் கொச்சையாயிருக்கப்பட்ட வடியேனுக்காகக் கிரு
பைஜநித் தடியேனிடத்திலே யெழுந்தருளிமீளவு மறைந்து நிற்
குமாயின் என்று பொருள் கூறியதற்கு. பி ம். சித்தியாரில், "இ
ருஞ்சுரபிக்கெங்கு, முருக்காணவெண்ணுத பான்முலைப்பால் வி
ம்மி யொழுகுவதுபோல் வெளிப்பட்டருளுவ னன்பர்க்கே."
ஏ-து, கண்டுகொள்க.

(௧௨)

இங்ஙனந் தத்துவவாதிதனாயிருக்கிற தேவரீரடியேனுக்கிந் தமாயா கருவிகளையுண்டாக்கி யடியேனதனோடுங் கூடியிருந்து ங்கூடாமல் நின்றும் வருகைக்கு வினமே லருளிச்செய்கின்றது.

இறந்தோய் கரணங்க ளெல்லா மெனக்குச்
சிறந்தோ யெனினுமெய்த் தேவே - பிறந்துடனுங்
காயங் கொளவுங் கொளாமலுங் கண்டதுநீ
யாயன்கொல் பாதவத்தற்று.

வி-ம். இறந்தோய் கரணங்களெல்லாம் - கருவிகரணாதிக ளைக்கொண்டறியுமறிவுக் கெட்டாம லகன்றுநிற்கிறநீ,—எனக்கு ச் சிறந்தோய் - அவையிற்றை யெனக்குண்டாக்கினாய்,—எனி னும் - அப்படியுண்டாக்கவும்,— மெய்த்தேவே பிறந்துடனு ங்காயங்கொளவும் கொளாமலுங் கண்டதுநீ - மெய்கண்ட தேவ னே பிறந்துடனும் மெய்போலப் பொருந்தியிருக்கிற சரீரமிது பொய்யென்று பொருந்தாமலும் பண்ணினது தேவரீர்,—ஆயன் கொல்பாதவதத்தற்று - இடையன்வெட்டின மரம்போலப் பாதி பச்சையும் பாதியுலர்ந்ததும்போல மெய்யாயிருந்த சரீரம் பொ ய்யென்றறிவித்து நீங்கியுநீங்காமலிருந்தது. (நு-ம்.) சரீரத்திலே பொருந்தியிருக்கையிலே காயநீக்க மெப்படியென்னில் சரீரம் பொய்யென்னறிவித்துத் தீக்ஷாக்கிரமங்களினாலே மலங்களைப் போக்கினபடியினாலேயு மருளிலே பொருந்தினபடியினாலேயுஞ் சிவனிடத்திலே சம்பந்தமில்லாமல் காயத்திலே சம்பந்தமில்லை. இதற்கு. பி-ம். சித்தியாரில். "தெரிவரியமெய்ஞ்ஞானம் சேர்ந் தவாறே சிவம்பிரகாசிக்குமிங்கே சீவன்முத்தனாகு, முரியமல மௌடதத்தாற் றடைப்புண்ட விடமுமொள்ளெரியினொளி முன்ன ரிருளுந்தேற்றின், வருபால்சேர் நீர்மருவுகலங்கலும் போலாகி மாயாதே தன்சத்தியுமாய்ந்துகாயந், திரியுமளவும் முளதாய்ப் பி ன்புகாயஞ்சேராத வகைதானுந்தேயுமன்றே." எ-து. கண்டு கொள்க. மெய்போலிருந்த சரீரம் பொய்யென்றதற்கு. பி-ம் சி

த்தியார் " மண்டனில்வாழ்வும்வானத்தரசயன் மாலார்வாழு, மெண்டருபூதபேத யோனிகள்யாவுமெல்லாங், கண்டவிந் திரமாசாலங் கனுக்கழுதிர தங்காட்டி, யுண்டுபோலின்றும்பண்பி னுலகினையசத்தமென்பர்." எ-ம். "கணத்திடைத்தோன்றிநின்று கழியுமென்றறிந்தொருக்கால், வணக்குறீரரனையென்றும் வானவர் வணங்கவைப்பன்"எ-ம். தேவாரத்தில். " வாழ்வாவதுமாய மிதுமண்ணுவது திண்ணம்,,எ-ம்." இன்றுளேனுளையில்லே னென் செய்வான் றேன்றினேனே"எ-ம். வருமேதுக்களைக் கண்டுகொள்க. (கரு)

அடியேனுக்குப் புண்ணியபாவங்க ளுண்டென்கைக்கு வழியே தென்னும் வினுமே லருளிச்செய்கின்றது.

அற்றதென் பாச முற்றதுன் கழலே
யருட்டுறை யுறையும்பொ ருட்சுவை நாத
வேறென் றிருந்த வென்னை யான்பெற
வேறின்மை கண்ட மெய்கண்ட தேவ
விருவினை யென்ப தென்னைகொ லருளிய
மனமே காயம் வாக்கெனு மூன்றி
னிதமே யகித மெனுமிவை யாயிற்
கணத்திடை யழியுந் தினைத்துணை யாகா
காரணஞ் சடமதன் காரிய மஃதா
லாரணங் காம்வழி யடியேற் கென்னைகொல்
செயலென தாயினுஞ் செயலே வாரா
தியமன் செய்திய தற்கெனி னமையும்
பின்னையின் றுகு மன்னது மிங்குச்
செய்திக் குள்ள செயலவை யருத்தின்
மையறிரி யமற்கு வழக்கில்லை மன்ன
வொருவரோ யமையு மொருவா வொருவற்

இருவரும் வேண்டா விறைவனு நின்றனே
நின்னது கருணை சொல்லள வின்றே
யமைத்தது துய்ப்பி னெமக்கணை வின்று
முள்ளது போகா தில்லது வாரா
துள்ளதே யுள்ள தெனு முரையதனற்
கொள்ளும் வகையாற் கொளுத்திடு மாயின்
வள்ளன் மையெலா முன்னிட வமையு
மீய வேண்டு மெனும்விதி யின்று
மாயினு மென்னை யருந்துயர்ப் படுத்த
நாயி னேற்கு நன்றுமன் மாயக்
கருமமுங் கரும பந்தமுந்
தெருள வருளு சிவபெருமானே.

வி-ம். அற்றதென்பாச முற்றதுன்கழலே - தேவரீரநுக்கிரகத்தினலே யடியேனுக் குண்டாயிருக்கப்பட்ட பாசபந்தங்களை நீக்கினதுந்தப்பாது. உன்னுடைய திருவடியிலே கூடினதுந் தப்பாது— அருட்டுறை யுறையும் பொருட்சுவைநாத - திருவருட்டுறையாகிய திருவெண்ணெய் நல்லூரிலே யெழுந்தருளி யிருக்கப்பட்ட வடியேனுக் கினிமைப் பயனயிருந்துள்ள தம்பிரானே, — வேறனெறிருந்த வென்னை யான்பெற வேறின்மைகண்ட மெய்கண்டதேவ-தேவரீரைவிட் டந்நியமாயிருப்பனென்று கண்டிருந்தவடியேனை யடிமையென்கிற முதலுங்கெடாமற் தேவரீரைவிட்டந்நியமாகாத முறைமையுங் கடாக்ஷித்தருளின மெய்கண்டநாதனே,—இருவினையென்ப தென்னைகொல் அடியேனுக்குப் புண்ணிய பாவ முண்டென்ற தேது காரணங் கொண்டு,— கொல்-ஐயம்—அருளியமனமேகாயம் வாக்கெனுமூன்றி னிதமே யகிதமெனு மிவையாயில்-தேவரீ ரருளிச்செய்யப்பட்ட மனத்தினினைவாலும் வாக்கின்சொல்லாலுங் காயத்தின் றொழிலாலு மு

ண்டாகப்பட்ட விருப்புவெறுப்பினலே யிருவினையாகிய புண்ணி யபாவங்க ளுண்டாமாகில்,—கணத்திடையழியுந் தினைத்துணை யாகா-அப்படி யுண்டாகப்பட்ட நினைவுஞ் சொல்லுந் தொழிலுந் தோன்றினவுடனே யழிந்துபோமவையிற்றுக் கொருதினையளவு கண்டிப்புமில்லையாம். அன்றியும்—காரணஞ்சடமதன் காரியமஃ தால்-அந்த மனவாக்குக்காயங்களாகிய கன்மத்தின்காரணஞ்சட மாயிருப்பதொன்று; அதன்காரியங்களு மப்படிச் சடமேயானல் ஆரணங்காம்வழி யடியேற்கென்னைகொல்-அப்படிச் சடமாயிரு க்கப்பட்ட கன்மகாரியங்க ளடியேன்மேலெடுக்கிற ஜநநங்களி லேவந்துபொருந்தி வருந்துகைக்குச் செயலுண்டாம் வழியெது தான். கொல். ஐயம். அப்படி யந்தக்கன்மங்கள் சடமாயிருந்தா லு நீயறிவாயுள்ளவனுகையாலே யுன்னேடுங்கூடி மவதரத்திற்செ யலுண்டாயிருக்கும்—செயலெனதாயினுஞ் செயலே வாராது-அ ப்படி யடியேனுக்குச் செயலுண்டென்று சொல்லுகைக்குவழியி ல்லை, அப்படியறிவுண்டாமாகி லடியே னிச்சைப்படியேமுடியக் கண்டதுமில்லை. அன்றியும்—இயமன்செய்தியதற்கென்-அடியே னுக்கப்படிவேண்டின காரியங்கள் செய்துக்கொள்ளுகிறதுக்குச் செயலுண்டாமாகிலடியேனுக்கியமதண்டமுண்டாக்கத்தக்கபொ ல்லாங்குகள் செய்துக்கொள்வதில்லை. அதுவுமன்றியும்,—நின்ன மைவும் பின்னையின்றுகும்-அப்படி யடியேனுக்குவேண்டுங் கா ரியஞ்செய்துகொள்ளத்தக்க செயலுண்டாமாகில் தேவரீர்செய்வி க்கிறதுமில்லையாய்முடியும்—அன்னதுமிங்குச் செய்திக்குள்ளசெ யலவையருத்தின்-அப்படித் தேவரீர்செய்விக்கிறது மிப்பொழுத டியேன்செய்த கன்மத்துக்குத்தக்கது மேலைச்சுப்புசிப்புமாகில்— மையறிரிபமற்கு வழக்கில்லைமன்ன-தம்பிரானே மயக்கமற்றவிய மனடியேனைத் தண்டப்படுத்துகைக்கு வழக்கில்லையாம். அப்படி யானலு நீசெய்ததற்குத்தக்கது நாமுஞ்செய்விப்போ மியமனுந்த ண்டப்படுத்துவன் என்னில்,—ஒருவரேயமைய மொருவாவொ ருவற் கிருவரும்வேண்டா, அதுவயம், ஒருவாவொருவற் கொரு

வரோயமையு மிருவரும்வேண்டா-ஒப்பற்றதனிமுதலாயுள்ளவனே யடியேனொருத்தனுக் கொருத்தரோயமையும் தேவரீரு மியமனுங் கூடித்தண்டிக்கவேண்டுவதில்லை; ஆகையால்,—இறைவனுநின் றனே-சர்வமுந்தேவரீர் செயற்படுமென் றிருக்குமிடத்துவேறேயு மொருவனைக்கூடித் தேவரீர் செயற்படுத்துகில் தேவரீர்சர்வகர்த் தாவென்கிறதுமின்றே நின்றது. அதுவேனென்று கேட்டருளு கில்—நின்னது கருணைசொல்லளவின்றே-தேவரீர்காருண்ணியத் தின் பகுதியை யடியேனால் விண்ணப்பஞ்செய் தளவுபடுத்தத்த க்கதல்லவே, அப்படியிருக்க—அமைத்ததுதுய்ப்பி னெமக்கணை வின்று முள்ளதுபோகா தில்லதுவாரா துள்ளதேயுள்ள தெனுமு ரையதனுல் அமைத்ததுதுய்ப்பி னெமக்கணைவின்றும் - அடியே னுக்குண்டாகிய கன்மம்யாதொன் றுண்டு அதுபோகாது இல்லா தகன்மங்கள்வாராது ஆகையால் யாதொன் றாழிலே யுண்டாக்க ப்பட்டததுவே யிப்பொழுதுண்டாமென்று தேவரீரருளிச்செய்த திருவாக்கினு லடியெனுக்குண்டான பிராரத்தம்புசிக்கிறதொழிய மேலைக்குற்பத்தியாக வாகாமியமுண்டாகைக்குவழக்கில்லையே— கொள்ளும்வகையாற் கொளுத்திடுமாயின்-பிராரத்தம்புசிக்குமி டத் தாகாமியமுண்டாமென் றருளிச்செய்யில்—வள்ளன்மையெ லா முன்னிடவமையும் - தேவரீருக்குண்டாகிய வளப்பாடுகளெ ல்லா நினைந்திருந்தாற்போதும், அன்றியும்—ஈயவேண்டுமெனும் விதியின்றும்-அப்படிப் பிராரத்தம்புசிக்குமிடத் தாகாமியமேறு மாகில் கொடுத்துப் புண்ணியம்பெறவேணுமென்றுநூல்களை விதி க்கவேண்டுவதில்லையாம்—ஆயினும்-அடியேன் கேட்ட வினுவுக் குத் தேவரீர் புலப்பட வருளிச்செய்ததில்லையாகிலுமின்னமுந்தே வரீரருளிச்செய்யாம லடியே னறியும் பகுதியில்லை—என்னை யரு ந்துயர்ப்படுத்த நாயினேற்கு நன்றுமன்மாயக் கருமமுங் க்ருமபந் தமுந் தெருளவருளுசிவபெருமானே. அநுவயம், என்னையருந்து யர்ப்படுத்த கருமமுங் கருமபந்தமு நாயினேற்குநன்றுமன்மாயத் தெருளவருளு சிவபெருமானே - அடியேனுக்கரிய துக்கங்களையு

ண்டாக்கப்பட்ட கருமமாகிய புண்ணியபாவங்க ளுண்டாகிறது மந்தப் புண்ணியபாவங்களநுபவிக்குமிடத்து ஜநநத்திற்கேதுவா கிய வாகாமியகன்மமான கருமபந்தங்க ளுண்டாகிறது நாடாயிரு க்கப்பட்ட வடியேனுக்குத் தேவரீர் திருவுளம்வாழ்ந்தருளி விள ங்கவருளிச்செய்தருளவேணும் சிவமுதலாயிருக்கப்பட்டதம்பிரா னே. (நு-ம்) அருளியமனமே காயம் வாக்கெனுமூன் றினிதமே யகித மெனுமிவை யாயில். எ-கு, தேவரீரருளிச்செய்யப்பட்ட ம னத்தினினைவாலும் வாக்கின்சொல்லாலுங் காயத்தின்றொழிலா லுமுண்டாகப்பட்டவிருப்புவெறுப்பினாலே யிருவினையாகியபுண் ணியபாவங்க ளுண்டாமாகில் என்று பொருள்கூறியசற்கு. பி-ம், சிவப்பிரகாசத்தில். உற்றதொழில் நினைவுரையி விருவினையுமுள வாம்'' எ-து. கண்டுகொள்க. இருவினையாகிய மனவாக்குக்காய ங்களினாலே தோன்றப்பட்ட கன்மமும் ஜடமதன் காரணமும் ஜடமாகையா லந்தக்கன்மங்கள் சநநமரணத்திலேவந்து பொரு ந்துகைக்கு வழியேதென்றுகேட்க வதற் கறிவாயுள்ள வான்ம வோடு பொருந்தினவிடத்திலே செயலுண்டென்ன வப்படிச்செ யலுண்டாகி வியமதண்டம் வருவானேனென்ன அதுவு நீசெய்த கன்மத்துக்கேற்றபடி செய்வோமென்ன வதற்குத்தேவரீர் போ தமியமனைக்கொண்டு தண்டிக்கவேணுமோ வென்ன வியமனுக் தண்டிப்பா னுமுந்தண்டிப்போம்என்றதற்கு. பி-ம். சிவப்பிரகா சத்தில். படைத்ததொருபடி என்றவிருத்தமுழுவதும். போற்றிப் பஃறொடையில். தான்மாள. வெற்றிக்கடுந்தூதர் வேகத்துடன் வந்து, பற்றித்தம் வெங்குருவின்பாற்கட்ட-விற்றைக்கு, மில்லை யோபாவி பிறவாமையென்றெடுத்து, நல்லதோரின்சொ னடுவா கச் - சொல்லியிவர், செய்திக்குத்தக்க செய லுறுத்துவீரொன்று, வெய்துற்றுரைக்க விடைகொண்டு-மையறருஞ், செக்கிலிடைத் திரித்துந் தீவாயிலிட்டெரித்துந், தக்கநெருப்புத்தூண்டழுவித்து மிக்கோங்கு, நாராசங்காய்ச்சிச் செவிமடுத்துநாவரிந்துமீராவுன் றூனைத் தின்னென்றடித்தும்-பேராம, லங்காழ்நரகத் தழுத்து

வித்தும் பின்னுர்த்தம், வெங்கோபமாறுத வேட்கயரா-யங்கொரு நா, ளெண்ணிமுதல்காணுத வின்னற்கடுநரகம், பன்னெடுநாட் செல்லும் பணிகொண்டு-முன்னுடிக், கண்டுகேடன்கழித்தல் காரியமாமென்றெண்ணிக், கொண்டுவருநோயின்குறிப்பறிவார்-மண்டெரியிற், காய்ச்சிச்சுடவறுக்க கண்ணுரிக்க நன்னிதிய, மீத்துத் தாய்தந்தைதமரின்புறுதல் போலவப்படிச் செய்கிறதுங் கருணையே. எ-ம். வருமேதுக்களைக் கண்டுகொள்க. கொள்ளும்வகையா ற்கொளுத்திடுமையின். எ-ரு. பிராரத்தம் புசிக்குமிடத் தாகாமியமுண்டாமென் றருளிச்செய்யில் என்று பொருள்கூறியதற்கு. பி-ம். சிவப்பிரகாசத்தில். மேலைக்குவருவினையே தென்னிலங்கண் விருப்புவெறுப்பெனவறியவ் வினையுமெல்லா, மூலத்தவினைப் பயில்வா மென்னினுமேன்முற்றியதன் பயனுக்கு முளைக்குமென்பர் எ-து. கண்டுகொள்க. (௧௪)

இங்ஙனஞ் சொல்லப்பட்டகன்மங்களு மடியேனுங்கூடுகைக்கு வழியேதென்று கேட்கும்வினுமே லருளிச்செய்கின்றது.

மானமருஞ்செங்கை மதில்வெண்ணெய்வாழ்மன்ன,
போனவினை தானே பொருந்துமோ-யானதனி
லாவனேவாக்கா யமலனுநின்னருடான்
றேவனேயாதுக்கோ தேர்.

வி-ம். மானமருஞ்செங்கை மதில்வெண்ணெய் வாழ்மன்ன செந்தாமரைமலர்போன்ற ஸ்ரீயத்தத்திலே மான்மறியைத் தரித்துக்கொண்டு திருமதிளினுயர்ச்சியாலே சிறப்பினையுடைத்தாகிய திருவெண்ணெய்நல்லூரிலே யெழுந்தருளியிருக்கப்பட்ட தம்பிரானே—போனவினைதானே பொருந்துமோ - முன்ஜநநத்திலேயடியேன்செய்த புண்ணியபாவங்களான வினைகள் தானேவந் தடியேனைக் கூடுமோ—யானதனிலாவனோ-அடியேன்தானந்தவினைகளைக் கூடுவேனோ—ஆக்காய் - இவையிரண்டுமின்றித் தேவரீர்

கூட்டி முடியர்தபொழுது — அமலனுநின்னருடான் றேவனே யாதுக்கோ தேர்-நின்மலனுகிய வுன்னுடையவருளானது தானே துக்குண்டானதென்று திருவுளத்திலே விசாரித்தருளிச்செய்தருள் (க-து.) கன்மமுமநாதி யான்மாவுமநாதி சிவமுமநாதியாகையினு லே யவரவரார்ச்சித்த கன்மத்தைக் கத்தாகூட்டி முடிப்பனென் பதாம். உ-ம். சிவஞானபோதத்தில். அவ்வினையைச்செய்வதனில வ்வினைஞர் தாஞ்சென்றங், கவ்வினையைக் காந்தபாசம்போ-ல வ்வினையைப், பேராமலூட்டும் பிரானினுகராரோ, லார்தாமறிந்த ணைப்பா ராங்கு எ-து. கண்டுகொள்க. (சரு)

இங்ஙனஞ் சொல்லப்பட்ட கன்மங்கள் தேவரீர் திகைஷக ளினுலே சுத்திபண்ணியிருக்கவு மீளவும் புசிக்கைக்குவழி யேதெ ன்னும் வினுமே லருளிச்செய்கின்றது.

தோரா துணைப்பன் றெருமர லுளத்தொடு
போரா தருளுதல் பெரியோர் கடனே
நின்னைக் கலப்பதென் னுண்மை யெனின்
நின்னது நேர்மை சொன்மனத் தின்றே
யெழுவகைத் தாதுவி னெழுதுளை யிரண்டும்
பெருமுழைக் குரம்பையிற் பெய்தகத் தடக்கி
நீக்கி யென்றனைப் போக்கற நிறுத்தி
யிச்சை முதலிய வெழுப்பி நடத்திடும்
விச்சை சாலவும் வியப்பது நிற்க
வாக்கு மனமும் போக்குள தறவுஞ்
சொல்லு நினைவுஞ் செய்யுஞ் செயலு
நல்லவுந் தீயவு மெல்லா மறிந்து
முறைபிற ழாமற் குறைவுநிறை வின்றுய்க்
காலமுந் தேசமு மாலற வகுத்து
நடுவுநின் றருத்தலி னடுவனு குதியே

சான்ருேர் செய்தி மான்றிருப் பின்றே
சாலார் செயலே மாலா குவதே
யத்துவா மெத்தி யடங்கா வினைகளுஞ்
சுத்திசெய் தனையே யொத்தகன் மத்திடை
நீங்கன வென்னை யூங்கூழ் வினைகளு
மாங்கவை யருத்துவ தாரைசொ லதனும்
கரும மருத்துங் கடனது வின்ருங்
தருமம் புரத்தல் பெருமைய தன்றே
கண்ணினுண் மணிய கருத்தினுட் கருத்த
வெண்ணெய் வேந்த மெய்கண்ட தேவ
விடர்ப்படு குரம்பையு ணிருத்தித்
துடைப்பதில் லாவரு டோன்றிடச் சொல்லே.

வி-ம். தோரா துரைப்பன் றெருமரலுளத்தொடு-தேவரீர்சந்நி தியிலொருவிஞ விசாரியாமல் விண்ணப்பஞ்செய்கிறேன் அடி யேன் விதனத்தையுற்றவ ஞகையினலே, அன்றியும்,—போரத ருளுதல் பெரியோர் கடனே-பேதையாயிருக்கப்பட்டவர்கள் தங் கள் தாகத்தின் மிகுதியாலே தங்களுக்கு வேண்டின தொன்றை யெழுந்தது புத்தியாக விண்ணப்பஞ்செய்தாலு மவர்கள் தாகங்க ண்டுடனே கடாக்ஷித்தருளுகிறது பெரியோர்களுக்கு முறைமை யாகையாலும் விசாரியாமல் விண்ணப்பஞ்செய்தேன். அது வே தென்று கேட்டருளுகில்,— நின்னைக்கலப்ப தென்னுண்மையெ னின்-தேவரீரைக் கூடி யநுபவிக்கிறது அடியேனுடைய வற்ப போதமாமென்று தேவரீர் திருவுளம்பற்றுகில்,—நின்னதுபோர்மை சொன் மனத்தின்றே-தேவரீருடைய நுட்பத்தை விசாரிக்குமிட த்து வாக்கு மனத்துக்கு மெட்டப்பட்டதல்லவே, அப்படி யிருக் கிற தேவரீருக்குள்ளே யடங்கியிருக்கப்பட்ட வடியேனைத் தேவ ரீர்—எழுவகைத்தாதுவி னெழுதிரையிரண்டும் பெருமுழைக்குசு,

ம்பையிற் பெய்தகத்தடக்கி - நரம்பு எலும்பு மூளை தசை தோல் இரத்தம் சுக்கிலம் என்னப்பட்ட தாதுக்களேழும், கண், மூக்கு, செவி உபத்தமென்னப்பட்ட வற்பத்துவாரங்க ளேழும், வாய் அபானமென்னப்பட்ட பெரியதுவார மிரண்டுமாகத்துவாரமொன்பதுமாயிருக்கப்பட்ட சரீரத்திலேயிட் டுள்ளே யொடுக்கிவைத்து—நீக்கி யென்றனைப் போக்கறநிறுத்தி-என்றனைப் போக்கற நிறுத்தி நீக்கி-அடியேனந்தச் சரீரத்தைவிட்டுப் போகாமலும்நிறுத்தி யதனை விட்டுப்போமவதரத்து விடுவிப்பதுஞ்செய்து—இச்சைமுதலிய வெழுப்பிநடத்திடும் விச்சைசாலவும் வியப்பு - அடியேனுக்குண்டாயிருக்கப்பட்ட விச்சாஞானக்கிரியைகளையும்பிரேரிப்பித்துக் காரியப்படுத்துகின்ற வித்தை மிகவுங்கொண்டாட்டமாயிருந்தது—அதுநிற்க - இங்ஙனந் தேவரீர்செய்தருளினகாரியமடியேனாலேயோபுகழப்பட்டிருப்பது அது நிற்கட்டும்—வாக்குமனமும் போக்குளதநுவுஞ் சொல்லு நினைவுஞ் செய்யுஞ் செயலு நல்லவுந் தீயவு மெல்லாமறிந்து-அடியேன் வாக்கினாற் சொல்லுகிறதினாலும் மனத்தினால் நினைக்கிறதினாலுங் காயத்தாற் செய்கிற தொழிலினாலு முண்டாக்கப்பட்ட நன்மை தீமைகளாயுள்ளபுண்ணியபாவங்களெல்லாந் தேவரீர்திருவுளத்தடைத்தருளி—முறைபிறழாமற் குறைவு நிறைவின்றாய்க் காலமுந் தேசமு மாலறவகுத்து நடுவுநின்றருத்தலி னடுவனாகுதியே - அடியேன் செய்துவந்த வடைவுக்குத் தவறுவாராம லதற்கேற்றக் குறைச்சலற வந்தப் புண்ணியபாவங்களை யநுபவிக்கத்தக்க காலங்களையுமவையிற்றைப் புசிக்கைக் கிருப்பிடமான தேசங்களையு மயக்கமறவகுத்து அடியேனையு மந்தக்கன்மங்களையுங்கூட்டித் தேவரீர் நடுவனாகநின்று புசிப்பிக்கையினாலே தேவரீரை நடுவனென்கிறதுமுண்டே-ஆகையாலே—சான்றோர்செய்தி மான்றிருப்பின்றே - நடுவாயிருக்கப்பட்ட பெரியோர்க ளியல்புக்கு மயக்க முண்டாகாதே—சான்றோர் செயலேமாலாகுவதே-சான்றோரல்லாத வறிவீனரா யுள்ளவர்கள் செயல்களே மயக்கமுண்டாவது, அப்படியிருக்க—அத்துவாமெ

த்தி யடங்காவினைகளுஞ் சுத்திசெய்தனையே-மந்திரங்கள் பதங்கள் வன்னங்கள் புவனங்கள் தத்துவங்கள் கலைகளென்று சொல்லப்பட்ட வாறுவகையாலும் நிரம்பி மிஞ்சிக்கிடக்கிற கன்மங்களையெல்லாந் தீக்ஷைகளினாலே தேவரீர் சோதனைசெய் தடியேனுக்குச் சுத்திவருத்தினதுண்டே அதுவுண்டென்றருளிச்செய்யில்— ஒத்த கன்மத்திடை நீங்கின வென்னை - அடியேனுக் கிருவினையொப்பிலே போனதென்ன—ஊங்கூழ்வினைகளு மாங்கவையருத்துவ தாரை-இவ்விடத்துண்டான ஆழ்வினைகள் தேவரீர் செய்யப்பட்ட தீக்ஷைகளிலே சுத்திசெய்தவிடத் தந்தக்கன்மங்கள் புசிக்கிறதாரையாம், அதனால்—கருமமருத்துங் கடனதவின்றும்— தேவரீர் சுத்திசெய்தவர்கள் தன்னையென்றருளிச்செய்யில் தேவரீர் சுத்திசெய்தவழக்கினால் மீளவுங் கன்மங்கள் நின்று புசிப்பிக்கைக்குக் கடனில்லையாம், அப்படிப் புசிப்பிக்குமென் றருளிச்செய்யில்—தருமம்புரத்தல் பெருமையதன்றே-தேவரீர் தருமகத்தாவென் றெழுந்தருளியிருக்கிறது பெருமைக்கத்தனேயென்று விண்ணப்பஞ் செய்யப்படும்—கண்ணினுண் மணிய-கண்ணுக்கு மணிபோலக் காட்டாகவுள்ளவனே—கருத்தினுட் கருத்த-அறிவுக்கறிவாக வுள்ளவனே—வெண்ணெய்வேந்த - திருவெண்ணெய் நல்லூருக்குக் கத்தாவாக வுள்ளவனே—மெய்கண்டதேவ - மெய்கண்டநாதனே—இடர்ப்படு குரம்பையுளிருத்தித் தடைப்பதில்லா வருடோன்றிடச் சொல்லே - துக்கத்துக்கேதுவாயுள்ள சரீரத்துக்குள்ளே யடியேனை யிருத்திவைத்து அடியேனுக்குண்டான கன்மங்களைத் தய்ப்பதாகப் போகாதவந்த வநுக்கிரகத்தை யடியேனுக்கு விளங்கவருளிச்செய்தருள் (க-து) தேவரீரைக் கலந்திருக்கிறதென் னுண்மையானால் தேவரீருடைய நட்பமானவாக்குக்கெட்டாதென்று சொல்லவேண்டுவ தில்லையாம், ஏனெனில் சிவனு மான்மாவு மெக்காலமு மிடைவிடாம லிருக்கையிலேயு மான்மா மலத்திலே பற்றினபடியினாலே சிவனிடத்திலே கூடிநின்றும் பற்றில்லை யாகையா லச்சிவன் பெத்தத்திலு மொத்திருப்

பனென்பதாம். உ-ம். போற்றிப்பஃறொடையில். ''உள்ளமென்று நீங்கா தொளித்திருந்து தோன்றநின்ற, கள்ளமின்று காட்டுங்க ழல்போற்றி'' எ-து. கண்டுகொள்க. (நு-ம்.) எழுவகைத்தாதுக் களினாலும் நவத்துவாரங்களினாலு மிந்தச் சரீரத்திலே பொருந் தவைத்து ஜநநமரணமும் படுத்தி யடியேனுக் குண்டாயிருக்கப் பட்ட விச்சாஞானக்கிரியைகளையும் பிரேரிப்பித்து நடப்பித்ததுங் கொண்டாட்டமாயிருந்ததென்று சொல்லுவானேனென்னில்சிவ னைப்பொருந்தியுஞ் சரீரபெந்தத்திலே வைப்பானே னென்பது கருத்து. அது மலசம்பந்தமாகையாலே மலக்குருடனுக்கு மலநீ ங்கவேண்டி மாயையாகிய கோல் கொடுத்ததென வறிக. பி-ம். போற்றிப் பஃறொடையில். "கட்புலனூர் காணார்தங் கைக்கொடு த்த கோலேபோற், பொற்புடையமாயைப் புணர்ப்பின்கண்'' எ-து. கண்டுகொள்க. மனவாக்குக் காயங்களினாலே யார்ச்சிக்க ப்பட்டபுண்ணியபாவங்களைத் தேவரீர் திருவுள்ளத்தடைத்தருளி க்கன்மங்களை நடுவனாக நின்று புசிப்பிக்கையினாலே நடுவனென்று சொல்லப்பட்டிருக்கவும் பெரியோர்களியல்புக்கு மயக்கமு முண் டாகாதே ஆறத்துவாவுஞ் சுத்திபண்ணினதுண்டே * கன்மசம த்துவத்திலே போன தென்னவெனில், கன்மசமத்துவம்வந்தவி டத்துச் சத்திநிபாதமுண்டா யதினாலே கத்தா வாசாரியமூர்த்த மாகத் திருமேனிகொண்டுவந்து தீக்ஷாக்கிரமங்களினாலே யத்து வாசுத்திபண்ணி மலத்தைப்போக்கி யிரக்ஷிப்பன். பி-ம். சித்தி யாரில். ''அநாதிமுத்தனாய்ப் பரனாயசலனாயெல்லா வறிவுதொழி லநுக்கிரகமுடையவரன்கன்ம, நானுதிகமற் றொத்தவிடத்தேசத் திநிபாத நுழைவித்துமலங்களெலா நுங்கநோக்கி, மனாதிகரணங் களெல்லாமடக்கித் தன்னை வழிபடுநல்லறிவருளிமாக்கருணைக்கை யா, வினைதுபிறப்பினினின்று மெடுத்துமாறா வின்பமுத்திக்கே

* கன்மசமத்துவமாவது புண்ணியபாவங்க ளிரண்டிலேயு மூவர்ப்புவந்தது.

வைப்பனெங்கண் முத்தியிதுவே'' எ-ம். போற்றிப்பஃறொடை யில் ''நாடும்வினை யெல்லையிரண்டு மிடையொப்பிற்-பல்பிறவி, யத்தமதிலன்றே வளவென்றுபார்த்திருந்து, சத்திபதிக்குந் தரம் போற்றி - முத்திதரு, நன்னெறிவிஞ்ஞானகலர் நாடுமலமொன்றி னையு, மந்நிலையே யுண்ணின் றறுத்தருளிப்-பின்னன்பு, மேவாவி னங்கும் பிரளயாகலருக்குத், தேவாய் மலகன்மந் தீர்த்தருளிப்-பூவலயந், தன்னினின்றுநீங்காச்சகலர்க்கவர்போல,முன்னின்றுமும் மலந்தீர்த் தாட் கொள்கை.'' எ-ம். கண்டுகொள்க. இப்படிச்சுத் திபண்ணி யிருக்குமிடத்தும் பிராரத்தமாகிய வினை புசிக்கவந்த தானா? சுத்திபண்ணின ஆன்மாக்களை. அதெப்படியென்னில் சஞ்சித மாசாரியர் ஞானதிருஷ்டியினாலு மாகாமியமாசாரியர்வை த்தஞானத்தினாலும் பிராரத்தம்சரீரத்தோடேயும்நீங்கும். பி-ம். சிவப்பிரகாசத்தில், ''நிங்குறுமாயை சேராவகைவினை திரிவிதத் தால் நீங்கிட'' எ-ம். திருவாதவூரருக்கு அநுக்கிரகம்பண்ணின தி ல், ''விரிந்த சஞ்சிதவினைக ளன்புறும் விழிக்கவெந்தது விரும்பு மிப்பிறப்பிற், புரிந்தவல்வினை யுடலுடனகலும் புந்திசேரருள் வ ருவினைபோக்கு'' எ-ம். திருவருட்பயனில். என்றவினையுடலோ டேகுமிடை யேறுவினை தோன்றி லருளேசுடும். எ-ம். சித்தியா ரில். ''அரும்பருவ மடைதலுமே யாசானுகித், தோன்றிநுகராதவ கை முற்செய்கன்மத் துகளறுத்தங் கத்துவாதொட்டக்கறவே சோ தித், தேன்றவுடற் கன்மவநுபவத்தினாலறுத்திங்கினிச்செய்கன்ம மூலமல்ஞானத்தாலிடிப்பன். எ-ம். சொன்னது கண்டுகொள்க. ஆகையாலே யாசாரியர் கடாக்ஷத்தினாலே மோக்ஷத்தையடைந் தாலும் பிராரத்தம் புசிக்குமளவும் சரீர நிற்குமென்றது. ஆனால் ஞானவான்கள் புசிக்கிறது பிராரத்தமுமாயவர்கள்தேகமும்பிரா ரத்ததேகமானா லவர்களை யர்ச்சனைபண்ணினதினாலேயு நிவேதித் ததினாலேயு மான்மாக்கள் கதியடைவார்களென்றுசொல்லவேண் டுவதில்லையென்னில் அவர்கள் போகஞ் சிவனே யேற்றுக்கொள் ளுகையினாலே சிவபோகமாச்சுது, மாயாப்தார்த்தஞ் சிவபோக

ஙாமோ வென்மாயா பதார்த்தஞ் சுத்திபட்டு மந்திரமயமாய்மந்திரமு ஞானதிருஷ்டியினாலே பார்க்கப்பட்டு ஆன்மாவைச்சிவனுடலாகக்கொண்டு புசிக்கையினாலே சிவபோகமாச்சுது. பி-ம். உண்மைநெறி விளக்கத்தில். "பாதகங்கள்செய்திடினுங்கொலைகளவுகள்ளுப்பயின்றிடினு நெறியல்லா நெறிபயிற்றிவரினுஞ், சாதிநெறிதப்பிடினுந் தவறுகள்செய்திடினுந் தனக்கெனவோர் செயலற்றுத் தானதுவாய்நிற்கில், ஞதணிவனுடலுயிரா யுண்டுறங்கி நடந்து நானாபோகங்களையுந் தானாகச்செய்து, பேதமற நின்றிவனைத்தானாக்கிவிடுவன் பெருகுசிவபோகமெனப் பேசுநெறியிதுவே. எ-து. கண்டுகொள்க. அவர்கள்திருமேனிபிராரத்ததேகமல்லவென்றதுக்குத்திருஷ்டாந்தம்;திருஞானசம்மந்தமூர்த்திகடாக்ஷம்பெற்ற கவிபாணத்துக்குவந்த ஞாதாக்கள் திருமேனியடங்கலும்ஞானத்திலே பொருந்துகையினாலும் அப்பர்சுவாமிகள் திருமேனி சர்வான்மாக்களுங்காண ஞானப்பிழம்பாகிய மகாலிங்கத்திலேயடைதலினாலும் பட்டணத்துப்பிள்ளை ஞானமாகிய லிங்கமாய் முளைக்கையினாலேயும் திருவாதவூரர் சர்வான்மாக்களுங் காணத் திருவாசகத்துக்கு உண்மைப்பொருளைக்கேட்கப் பொருளிதுவென்று ஞானாகாசத்திலே பொருந்தினபடியினாலேயும் பிராரத்ததேகமாகிய மாயாதேகத்துக்கும் ஞானத்துக்குஞ் சம்பந்தமில்லாதபடியினாலே அவர்கள் திருமேனியும்ஞானமென்றேகண்டுகொள்க.

சர்வான்மாக்களுந் தேவரீருக்கடிமையாக விருக்கையிலேயுஞ் சிலர்க்குத் திருவருள்கடாக்ஷித்தும் சிலர்க்குக் கடாக்ஷியாமலுமிருப்பானேனென்றுகேட்கும் வினாமே லருளிச்செய்கிறது.

சொற்றொழும்பு கொள்ளநீ சூழ்ந்ததுவு நிற்செயல்கண்
மற்றவர்க ளின்னோக்கின் மாய்ந்தவுயிர்க்-குற்றங்
கொளுத்தியாங் கைய வுயர்வெண்ணெய் நல்லூர்க்
குளித்தமதுங் கொன்றையெங் கோ.

வி-ம். சொற்றெழும்பு கொள்ளநீ சூழ்ந்ததவும்-சர்வான்மா
க்களுந் தேவரீருக்கடிமையாக விருக்கவுஞ் சிலர் தேவரீர்திருவரு
ளைப் பெறத்தக்கதான வடிமைத்திறங்கள் செய்துவரு முபாயங்
கொடுத்தருளினாய்,—நிற்செயல்கண் மற்றவர்கள் - மற்றுள்ளபெ
த்தான்மாக்களையுந் தேவரீர் சேட்டைப்படுத்துகையினாலே செய
ற்பட்டுவருகிறவர்கள் இங்ஙனமிரண்டுவகையிலுள்ள ஆன்மாக்க
ளுந் தேவரீராலே செயற்பட்டு வருமிடத்தும்,—நின் ேறக்கின்
மாய்ந்தவுயிர்க்குற்றங்கு - தேவரீர் திருக்கண்சாத்தினாலே செயல
றுகைவந்த வான்மாக்களிடத்திலே யநுக்கிரகஞ்செய்து பிரகாசி
த்துநின்றும்,—ஒளித்தியாங்கு-மற்றுள்ளபெத்தரிடத்திலே கூடிநி
ற்குமிடத்து மறைந்துநின்றும். இங்ஙனம் வருகிறமுறைமையை
ஐய - அடியேனுக்குச் சுவாமியாயுள்ளவனே,—உயர்வெண்ணெய்
நல்லூர்க் குளித்தமதுக் கொன்றையெங்கோ - சிறப்பினா லுயர்ந்
திருக்கப்பட்ட திருவெண்ணெய்நல்லூரிலே மதுக்களினால் முழு
கப்பட்ட கொன்றைமாலையைச்சாத்தி யெழுந்தருளியிருக்கப்பட்
ட கர்த்தாவாயுள்ளவனே,—சொல் - அடியேன்விண்ணப்பஞ்செ
ய்த காரியமிரண்டையு மருளிச்செய்தருள் (க-து.) சிவன் கத்தா
வென்கிறதும் ஆன்மாக்க ளடிமையென்கிறதும் பொது. இனிச்
சிறப்பாவது கத்தாவை யாண்டவனென்றறிந்து இரண்டற்றவன்
பினாலே வழிபடுகின்ற ஞானவான்களுக்குத் தயிரினெய்போற்
றோன்றியிருப்பன். ஆண்டவனடிமையென்றறியாத பெத்தான்
மாக்களிடத்திலே பாலினெய்போலத் தோன்றாதுநிற்பன். உ-ம்,
சிவஞானபோதத்தில். "தன்னுணரு நேசத்தர்தம்பானிகழுந்தநி
நெய்போற் பாசத்தார்க் கின்றாம்பதி" எ - ம். திருவாசகத்தில்,
"அரசேபொன்னம்பலத்தாடும்" என்னும் செய்யுளில் "பிறை
சேர் பாலினெய்போலப் பேசாதிருந்தா லேசாரோ." எ-ம். தே
வாரம், "விரகிற்றீயினன் பாலிற்படுநெய்போல், மறைய நின்று
ளன் மாமணிச்சோதியான், எ-ம். வருமேதுக்களைகண்டுகொள்க.

இங்ஙன முயிர்க்குயிராய் நின்று காரியப்படுத்துகிற் சிவன் பெத்தத்தில் மறைந்துநின்று காரியப்படுத்துகிற முறைமையு முத்தியிற் பிரகாசித்துத்தான் மேலிட்டுநின் றுபகரிக்குமுறைமையு மேலருளிச்செய்கின்றது.

கோலங்கொண்ட வாறுணராதே
ஞாலங்காவல னியானெனக்கொளீஇப்
பொய்யைமெய்யெனப் புகன்றுவையத்
தோடாப்பூட்கை நாடிநாட
வென்னுட்கரந்தென் பின்வந்தருளி
யென்னையுந்தன்னையு மறிவின்றியற்று
மென்னதியானெனு மகந்தையுங்கண்
டியாவரியாவையு மியாங்கணுஞ்சென்று
புக்குழிப்புக்குப் பெயர்த்துழிப்பெயர்த்து
மிக்கபோகம் விதியால்விளைத்திட்
டெற்பணியாளா யெனைப்பிரியாதே
யோடிமீள்கென வாடல்பார்த்திட்
டென்வழிநின்றன னெந்தையன்றே
வருண்மிகவுடைமையி னருட்டுறைவந்து
பொருண்மிகவருடலும் பொய்ப்பகையாதலுங்
கைகண்டுகொள்ளெனக் கடலுலகறிய
மெய்கண்டதேவனெனப் பெயர்வீஇத்
தன்னுட்கரந்து தான்முன்னாகித்
தன்னதுந்தானுமா யென்னையின்றாக்கித்
தன்னையுமென்னையுந் தந்துதனது
செய்யாமையுமென் றுசெயலின்மையு

மெம்மான்காட்டி யெய்த
லம்மாவெனக்கே யதிசயந்தருமே.

வி-ம். கோலங்கொண்டவாறுணராதே ஞாலங்காவலனியா னெனக் கொளீஇ-துக்கத்துக் கேதுவாயிருக்கப்பட்ட சரீரத்தை யெடுத்தோமே யென்கிறதை விசாரியாமல் பூமிக்கிராசாவாயிருக்கிறவ னுமல்லோவென்று கருதிக்கொண்டு,—பொய்யைமெய்யெனப்புகன்று-அசத்தியமா யிருக்கப்பட்ட தேகாதிப்பிரபஞ்சத்தை சத்தியமென்று சொல்லிக்கொண்டு,—வையத்தோடாப் பூட்கை நாடிநாடா வென்னுட்கரந்து-பிரபஞ்ச வியாத்தி பண்ணுகிறதே மேற்கொளாகவிருப்பதைச் செய்து நமக்கொருகத்தாவுண்டென்றுவிசாரியாதபடி யெனக்குள்ளே மறைந்துநின்று,—என்பின் வந்தருளி - நான்செய்யுஞ் செயலுக்கெல்லா மொத்தொழுகிநின்று,—என்னையுந்தன்னையு மறிவின்றியற்று மென்னதியாதெனு மகந்தையுங்கண்டு நாமோரடிமையென்றுந் தானொருநாயனென்னு மறியாமற் செய்கிற யானெனதென்னு மகந்தையுங்கண்டு,—யாவரியாவையு மியாங்கணுஞ்சென்று-உயர்திணை யஃறிணையாகியயோனிபேதங்களினும் பூமியந்தர சுவர்க்கமென்கிற வுலகங்களினுமென்னோ டொக்கச்சென்று,—புக்குழிப்புக்கு-நான்சென்ற ஜநிக்கிறவிடங்களிலேதானு மொக்கப்புகுந்து,—பெயர்த்துழிப்பெயர்த்து-நான் விட்டுப்போகுமிடத்துத் தானுமொக்கப்போந்து,—மிக்கபோகம் விதியால்விளைத்து - வெகுவிதபோகங்களையு மெனக்குள்ள முறைமையின்படியேயுண்டாக்கி.—இங்கெற்பணியாளாய் இவ்விடத்தென்னையூட்டி யுறக்கிநிற்கிற பண்ணையாளுமாய்,—என்னைப்பிரியாதே-என்னைவிட்டு நீங்குவதுஞ் செய்யாமல்,—ஓடிமீள்கெனவாடல் பார்த்திட் டென்வழிநின்றன னெந்தையன்றோ-நான் சநநமரணப்பட்டுப் போக்குவரவுசெய்கிற நாடகத்தையும் பார்த்துத் தன்முதன்மையும்விட் டென்வசத்திலேநின்ற னெம்முடைய சுவாமியாயுள்ளவன், இஃதாச்சரியம், இந்தநிலைபெத்தம்

மேல்முத்தி. அருண்மிகவுடைமையின் - தனக்குக்கிருபைமிகுத் திருக்கையினாலே,—அருட்டுறைவந்து - திருவெண்ணெய்நல்லூராகிய திருப்படைவீட்டிலே திருவவதாரஞ் செய்தருளி,—பொருண்மிகவருடலும் சிவாநுபவமாகிய பொருளானது மிகுதியாக நின்று அநுக்கிரகிக்கிறதையும்,—பொய்ப்பகை யாதலும் - அந்தப்பொருள் பிரபஞ்சமாகிய பொய்யைக்கடிந்து தீர்க்கிறவழக்கையுங்,—கைகண்டுகொள்ளென பிரத்தியக்ஷமாகக்கண்டுகொள்ளெனக் காட்டியருளி,—கடலுலகறிய மெய்கண்டதேவனெனப் பெயர்வீஇ - சமுத்திரஞ்சூழ்ந்த வையகத்தா ரறியத்தக்கதாக மெய்கண்டநாதனென்கிற திருநாமத்தினையும் பரப்பியருளி,—தன்னுட்கரந்து தான்முன்னாகி - தன்னுடைய பேரறிவினுள்ளேயென்னுடைய சிற்றறிவை யடக்கிக்கொண்டுதன்செயலேமேலீடாக—தன்னதுந்தானுமா யென்னையின்றாக்கி தன்னுடையவருளுந்தானுமா யென்னையு மென்னுடைய ஞானத்தோற்றத்தையு மடக்கி தன்னையு மென்னையுந்தந்து தானொருமுதலுண்டென்கிறதுங்கெடாமல் யானொருமுதலுண்டென்கிறதுங் கெடாமலெனக்குப்புலப்படவறிவித்து,—தனது செய்யாமையுமெனது செயலின்மையும் தான் சர்வமுங் காரியப்படுத்தி நிற்குமிடத்துந் தானென்றிலஞ்சுட்டியறியாமற் றோய்வறநிற்கிற முறைமையினையு நான்சர்வமுஞ் செய்து நிற்குமிடத்து மென்னாலொன்று முடியாதென்கிற செயலறுதியையும்,—எம்மான் காட்டியெய்தல்-எம்முடைய சுவாமியாயிருக்கிறவ னெனக்குத் தரிசனப்பட்டுநின்ற முறைமையைப்பார்த்தவிடத்து,—அம்மா வெனக்கேயதிசயந் தருமே-மிகவுங் கொண்டாடப்பட்டு எனக்குத்தானே யாச்சரியத்தையுந் தாராநிற்கும்.()

இங்ஙனம் பாசக்ஷபம்பண்ணின வாச்சரியத்தை மேலருளிச் செய்கின்றது.

தருமா தருமத் தலைநின் றாழ்வேனைக்
கருமா கடல்விடமுண் கண்டப்-பெருமான்

திருவெண்ணெய்நல்லூர்ச் சுவேதவனத்தா
னுருவென்னவந்தெடுத்தா னுற்று.

வி-ம். தருமாதருமத் தலைநின்றாழ்வேனை - தன்மமாகிய பசு புண்ணியத்தையு மதன்மமாகிய பாவத்தையுஞ்செய்து துக்கசாகரத்திலே கிடந்தழுந்துகிற வென்னை,—கருமாகடல் விடமுன்கண்டப்பெருமான் - கருமைபொருந்தின மகத்தானசமுத்திரத்திலே யுண்டாகப்பட்ட நஞ்சினை யமுதுசெய்தடக்கப்பட்ட கண்டத்தினையுடைய கத்தாவாயுள்ளவனே, திருவெண்ணெய்நல்லூர்ச் சுவேதவனத்தான் - திருவெண்ணெய்நல்லூராகிய திருப்படைவீட்டிலே யெழுந்தருளியிருக்கப்பட்ட சுவேதவனப் பெருமாளென்னும் பிள்ளைத்திருநாமத்தையுடையவன், உருவென்ன வந்தெடுத்தானுற்று - சரீரதொந்தனைப்பட்டு நிற்கிற வென்னைப்போலே யுருப்பட்டுவந்து நான் சநநக்குழியிலழுந்தாமலெடுத்துத்தனது திருவடியிலே கூட்டிக்கொண்டருளினான். (சக)

கத்தா விவ்வண மாசாரியமூர்த்தியாகத் திருமேனிகொண்டெழுந்தருளிப் பாசச்சேதனம்பண்ணித் தனது காருண்ணியமாகியவுண்மைஞானத்தைக் கடாக்ஷித்த முறைமையை வியந்துரையாகப் புகழ்ந்தமுறைமை மேலருளிச்செய்கின்றது.

உற்றவர்பெற்றவ ரற்றவர்முற்று
மற்றவர்க்கற்றவ னல்லவர்க்கல்லவ
னந்தமாதி யில்லவன்வந்து
குரக்குமனத்துக் கொடியேன்பரக்கும்
பரப்பைக்குவித்து நிறுத்திப்பிடித்திட்
டிருள்வெளியாகு மருளினையறுத்து
வந்துபுகுதலுஞ் சென்றுநீங்கலு
மின்றியொன்றாய் நின்றவந்நிலையி
லொன்றாகாம லிரண்டாகாம

லொன்றுமிரண்டு மின்றாகாமற்
றன்னதுபெருமை தாக்காணுயினு
மென்னதுபெருமை யெல்லாமெய்தித்
தன்னையெனக்குத் தருவதையன்றியு
மென்னையுமெனக்கே தந்துதன்னது
பேரானந்தப் பெருங்கடலதனு
ளாராவின்ப மளித்துத்தீரா
வுள்ளும்புறம்பு மொழிவின்றிநின்ற
வள்ளன்மைகாட்டி மலரடியருளிய
மன்னனெங்கோன் வார்புனற்பெண்ணை
வெண்ணெய்க்காவலன் மெய்கண்டதேவ
னண்ணலருளா லயத்தனண்ணிய
மலமுத லாயினமாய்க்கு
முலகவுயிர்க்கெல்லாமொருகண்ணே.

வி-ம். உற்றவர்பெற்றவ ரற்றவர்முற்று மற்றவர்க்கற்றவன் - தனதுறவின் முறையாரா யுள்ளவர்கள் மாதாபிதாக்கள் தனக்கு வேற்றுமையற்றிருக்கப்பட்ட ஸ்ரீ மற்றுமுண்டான தனதான்னிய க்ஷேத்திரங்கள் முதலாயுள்ள சர்வவுபாதியாயிருக்கப்பட்டதேகாதிபிரபஞ்சத்தை நீங்கினவர்களுக் கிரண்டற்றுப் பிறிவறநிற்கப்பட்டவன், அல்லவர்க்கல்லவன் - அப்படிச் சர்வவுபாதிகளையும்நீங்காதவர்களுக்கு வேறாய்சிற்கப்பட்டவன், அந்தமாதியில்லவன் - தனக்குமுடிவுமுதலுமில்லாதவன், வந்து-ஆசாரியமூர்த்தமாகத்திருமேனிகொண்டெழுந்தருளிவந்து - குரக்குமனத்துக் கொடியேன்பரக்கும் பரப்பைக்குவித்து - குரக்குப்போதம்போல வொன்றிலுந் தரிப்பில்லாமலெழுந்தது புத்தியாகத்திரிகிற பாவியாயிருக்கிறவென்னைப் பிரபஞ்சப்பரப்பில் திரிகிறவியாத்தியை யொடுக்குவித்து, நிறுத்திப்பிடித்திட் டிருள்வெளி யாகுமருளினையறுத்து

னது திருவடி ஞானத்திலேநிறுத்திப் பழைய பிரபஞ்சவாதனையி லேபோகாமற் பிடித்துக்கொண்டு கேவலசகலமென்கிற மயக்கத் தையுநீக்கி, வந்துபுகுதலுஞ்சென்று நீங்கலுமின்றிதான்வந்தென் னுள்ளத்திற் புகுதுகிறதும் நான்சென்று தன்னோடேகூடி யென க்குண்டானபாசங்களை நீக்குகிறதுமில்லாமல், ஒன்றாய்நின்றவக்நி லையில் - அநாதியேதானு நானுநீங்காமல் நின்றநிலையிலே, ஒன்று காம விரண்டாகாமல் - தானுநானு மொன்றுபடுவதுஞ்செய்யாம லிரண்டுபெடுவதுஞ் செய்யாமல், * ஒன்றுமிரண்டு மின்றாகாமல் தானும்யானும் ஒன்றுபட்டு நிற்கிறதும் பெறுவானும்பேறுமாயிர ண்டுபெட்டு நிற்கிறது மில்லையாகாமல், தன்னதுபெருமை தாக்கா னுயினுமென்னது பெருமை யெல்லாமெய்தி - தனக்குண்டான சர்வஞ்ஞமும் பஞ்சகிருத்தியமுமெனக் குண்டாக்கினனில்லையாயி னுமெனக் குண்டாயிருக்கப்பட்ட விச்சாஞானக்கிரியைகளையும்வி யாத்திவியாபகங்களாகிய பெருமையு மிவைகளெல்லாந் தன்னு டைய பூரணத்திலே யடக்கிக்கொண்டு, தன்னையெனக்குத்தருவ தையன்றியு மென்னையு மெனக்கேதந்து - தன்னுடைய வானந்த சொரூபத்தை யெனக்குக் கடாக்ஷித்ததுமன்றியேயந்தப்பேரின் பத்தோடுங்கூடி யநுபவித்திருக்கிற வான்மபோதமாகியசிற்றறிவு கெடாமற் கெட்டுநிற்கிற முறைமையுமெனக்குக்கடாக்ஷித்தருளி —தன்னதுபேரானந்தப் பெருங்கடலதனு ளாராவின்பமளித்து தன்னுடையபரிபூரணமாகிய வானந்தவெள்ளமான பெரிய வருட் சமுத்திரத்திலே விளையப்பட்டிருப்பதாய் வொருகாலத்தினுமுவ ட்டாத வின்பத்தை யெனக்குக் கடாக்ஷித்தருளி,—இராவுள்ளும் புறம்புமொழி வின்றிநின்ற வள்ளன்மைகாட்டிஒருகாலத்தினும் விடப்படாம லக்ம்புறமெங்கும் பூரணமாய்நின் றனவரதமு மறி

---

* ஒன்றாகாமலிரண்டாகாம லொன்றுமிரண்டுமின்றாகாமல் என்பதற்கு, பேதமுமபேதமும் பேதாபேதமுமாகாமல் என்று பொருளுரைப்பினுமாம்.

வித்துநிற்கிற வளப்பாட்டையுந் தரிசிப்பித்து,—மலரடியருளிய மன்ன-தாமரைமலர்போன்ற ஸ்ரீபாதத்தைக் கடாக்ஷித்தருளின தமபிரானே,—எங்கோன்-எமக்குக் கத்தாவா யுள்ளவன,—வார்புனற்பெண்ணை வெண்ணெய்க்காவலன் - மென்மேலும் வருகிறபுனலினாலே பெருகப்பட்ட பெண்ணையாற்றையுடைய திருவெண்ணெய்நல்லூருக்குக் கத்தாவா யிருக்கப்பட்டவன்,—மெய்கண்டதேவன்-மெய்கண்டதேவனென்கிற திருநாமத்தினை யுடையவன்,—அண்ணல் - எனக்குச் சுவாமியா யிருக்கிறவன்,—அருளாலயத்தன் - தனதருளே கோயிலாக வெழுந்தருளி யிருக்கப்பட்டவன்,—நண்ணிய - என்னைவந்து பொருந்திய,—மலமுதலாயினமாய்க்கு மூலகவுயிர்க்கெல்லா மொருகண்ணே-ஆணவமலமுதலாயுள்ள மலங்களையெல்லாஞ் சேதனம்பண்ணினவன் சர்வலோகங்களினுமுள்ள வான்மாக்களுக்கெல்லா மோரறிவாகநின்றநுக்கிரகஞ்செய் தருளுகிறவன்(ற-ம்.)அற்றவர்க்கற்றவன்-எ-கு தேகாதிபிரபஞ்சங்களை நீக்கப்பட்ட தபோதனர்க்குக் கத்தாவிரண்டற்று நிற்பனென்று பொருள்கூறியதற்கு. பி-ம். தேவாரம். "உலகினியற்கையையொழித்திட், டற்றவரகத்துச்சிவனுறைகின்றவாலவாயாவதுமிதுவே," எ-ம். தேகாதியென்றது உடம்புமுதலானவற்றைநீங்கவே தவமாமென்பது கருத்தாகையாலெனவறிக. இதற்கு பி-ம். திருவாசகம்."பாவியேற்குமுண்டாங்கொல் பரமாநந்தப்பழங்கடல்சேர்ந், தாவியாக்கையானெனதென்யாதுமின்றியறுதலே," எ-ம். திருவள்ளுவப்பயன். மற்றுந் தொடர்ப்பாடெவன்கொல் பிறப்பறுக்க லுற்றார்க்குடம்புமிகை, எ-ம்.கண்டுகொள்க, அந்தமாதியில்லவன். எ-கு முடிவுமுதலுமில்லாதவனென்று பொருள்கூறியதேதென்னில் சிவன்றோற்றமு மீறுமில்லாதவனாகையாலே யப்படிச்சொன்னதென வறிக. இதற்கு.பி-ம் திருவெம்பாவையில். "ஆதியுமந்தமுமில்லா வரும்பெருஞ்சோதியை," என்பதுகண்டுகொள்க. இனிவந்து. எ-கு. ஆசாரிய விக்கிரகமாக வெழுந்தருளியென்று பொருள்கூறியதற்கு. பி-ம் திரு

வெம்பாவையில் ''இங்குநம்மில்லங்கடோறுமெழுந்தருளிச் செங் கமலப்பொற்பாதந்தர்தருளுஞ்சேவகனை,, எ-து. கண்டுகொள்க. குரக்குமனத்துக்கொடியேன் பரக்கும்பரப்பைக் குவித்து. எ-கு பிரபஞ்சவியாத்தியையொடுக்குவித்து என்று பொருள் கூறியத ற்கு. பி-ம். சிவஞானபோதத்தில்''சிறைவிட், டலைகடலிற்சென் றடங்குமாறுபோன்மீளா, தலைவிலரன்பாதத்தையுற்று. எ - து. கண்டுகொள்க, இருள்வெளியாகு மருளினையறுத்து எ-கு. கேவ லசகல மிரண்டினையுநீங்கியென்றுபொருள்கூறியதேதென்னில் கேவலத்திலாணவத்தால் மறைப்புண்டுகிடக்கையாவிருளென்ற தெனவறிக. சகலத்திற்கலையாதி தத்துவங்களோடுங்கூடி ஜீவிக் கையா லொளியென்ற தெனவறிக. இதற்கு. பி-ம். சிவப்பிரகா சத்தில்''புகலுமல மொழித்தற்கு என்னுஞ்செய்யுளில் இசுவிவரு மிவையுணரி லிருள்வெளியாந் தன்மையெய்தும் எ-து. கண்டு கொள்க. இனிவந்து புகுதலுஞ்சென்று நீங்கலுமின்றி யொன்று ய்நின்ற வந்நிலையில். எ-கு. சிவனுன்மாவை வந்து கூடவுமில்லை. ஆன்மாசென்று சிவனைக் கூடவுமில்லையென்று பொருள்கூறியத ற்கு பி-ம். போற்றிப்பஃறொடையில். உள்ளமென்றுநீங்காதொ ளித்திருந்து தோன்றிநின்ற,கள்ள மின்றுகாட்டுங் கழல்போற்றி, எ-து. கண்டுகொள்க. ஒன்றுகாம விரண்டாகாம லொன்று மிர ண்டுமின்றுகாமல் எ-கு. ஆன்மாவுஞ் சிவனுமிரண்டுமுதலா யிரு க்குமிடத்து ஒன்றுபட்டு நில்லாதென்று மிரண்டுபட்டுநில்லாதெ ன்று மொன்றுமிரண்டுமில்லாம லிராதென்றும் பொருள்கூறியது ற்கு. பி-ம். சிவப்பிரகாசத்தில் உடலுயிர்க்கண்ணருக்கனறிவொ ளிபோற்பிரிவருமத்துவிதமாகும் எ-ம். திருக்காளத்தியந்தாதியில் உரையும்பொருளுமுயிருமுடலும் விரையுமலரும்போல்விம்மிச் - சிதைவின்றிச் சென்றவாறெங்ஙன் றிருக்கயிலை யெம்பெருமா, னின்றவாறெங்குநிறைந்து,, உ-ம். கண்டுகொள்க. இனிதன்ன துபெருமைத் தாக்காணுயினும். எ-கு. தனக்குண்டாகிய சர்வஞ்

ருத்துவமும் பஞ்சகிருத்தியமு மெனக்குண்டாக்கினு ரில்லையாயி
னுமென்று பொருள்கூறியதேதென்னில் ஆன்மா முத்தியைப்பெ
ற்றவி—த்தஞ் சிவனுக்குண்டான தன்மை யுண்டாகாதென்பது
கருத்து. இதற்கு பி-ம். சிவப்பிரகாசத்தில் இன்றநோக்குறை
நடக்குமியல்பிலோர்க்கிளையவாய்ந்து, நின்றதோரலகைநேர்ந்தா
னிகழ்வதெனதுபோலுள்ளத் தொன்றியவுணர்வு தம்பாலுள்ளது
நிகழ்த்துமீசன், றன்றொழினடத்துமேனிதனக் கெனக்கொண்டு
தானே. எ-ம். சித்தியாரில்''உயிர்தானுஞ்சிவானுபவமொன்றினுக்
குமுரித்தே. எ-ம். சங்கற்பநிராகரணத்தில்'நாழிகொள்ளாதாழி
யினலை புனலதனுற்கருத்து முதலுளதாகவேண்டும் எ-ம், கண்டு
கொள்க. என்னதுபெருமையெல்லாமெய்தி எ-கு. ஆன்மாவுக்கு
ள்ள விச்சாஞானக்கிரியைகளையும் வியாத்திவியாபகங்களையுஞ்சிவ
னுள்ளே யடக்கிகொள்ளுவனென்று பொருள்கூறியதற்கு பி-ம்.
சித்தியாரில்.''விருப்பிப்பொன்னினைக்குளிகையொளிப்பதுபோ
லடக்கி. எ-து, கண்டுகொள்க. இனிதன்னை யெனக்குத்தருவதை
யன்றியும் எ-கு. பி-ம். சித்தியாரில்.''இந்தனத்தினெரிபாலிநெய்
என்னுஞ்செய்யுளிலே,''தானுகித்தன்னுருவப்பரப்பையெல்லாங்
கொடுபுகுந்துபதிப்பணிவன்பாலே'' எ-ம். திருவாசகத்தில்.''தந்த
துன் றன்னைக்கொண்ட தென்றன்னைச்சங்கரா வார்கோலேசது
ர்த்த ரந்தமொன்றில்லா வாநந்தம்பெற்றேன் யாதுநீபெற்றதொ
ன்றென்பால். எ-ம். கண்டுகொள்க என்னையு மெனக்குத் தந்து.
எ-கு. அந்தச் சிவானுபவத்தை யநுபவிக்கின்றசிற்றறிவுங்கெடா
மலென்றுபொருட் கூறியதேதென்னில் சிற்றறிவுகெட்டாலநுப
விப்பாரில்லாதாகையா லப்படிச்சொன்னதெனவறிக. முத்தியி
லான்மா நின்றனுபவிக்குமென்பதற்கு. பி-ம். உண்மை விளக்கத்
தில் முந்திதனில்மூன்றுமுதலுமொழியக் கேள். என்ற பாட்டும்.
சித்தியாரில் உயிர்தானுஞ் சிவானுபவ மொன்றினுக்கு முரித்தே.
எ-ம். சொன்னதிப் பொருள் பற்றியெனவறிக. தன்னது பேரா
நந்தப் பெருங்கடலதனுளாராவின்பமளித்து, எ-கு. அருட்சமு

த்திரத்திலே விளையப்பட்ட வின்பத்தையெனக்குக்கடாக்ஷித்தெ
ன்று பொருள்கூறியதற்கு வி-ம். சித்தியாரில் சித்தாந்தத்தே சிவ
ன்றன் திருக்கடைக்கண் சேர்த்திச்சநநமொன்றிலே சிவன்முத்
தராக வைத்தாண்டுமலங்கழுவி ஞானவாரிமடுத்தாநந்தம்பொழி
ந்து. எ-து. கண்டுகொள்க. தீராவுள்ளும் புறம்பு மொழிவின்றி
நின்ற வள்ளன்மைகாட்டி. எ-கு. ஒருகாலத்திலும் விடப்படா
மல் சிவனுள்ளும் புறம்புமாய்நிறைந்து நிற்பனென்றுபொருள்கூ
றியதற்கு. பி-ம். திருவாசகத்தில் உம்பர்கட்கரசேயொழிவற
நிறைந்தயோகமே. எ-து. கண்டுகொள்க. மலரடியருளிய மன்
னனெங்கோன். எ-கு. தாமரைமலர்போன்ற ஸ்ரீபாதத்தைக்
கடாக்ஷித்தருளினவனென்று பொருள்கூறியதற்கு பி-ம். திருவெ
ம்பாவையில். செங்கமலப்பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை.
எ-து. கண்டுகொள்க, அருளாலயத்தன் எ-கு. அருள்கோயிலாக
வெழுந்தருளியிருக்கப்பட்டவனென்று பொருள்கூறியதேதென்
னில் சிவன் தனதருளாகிய சத்தியுடம்பாக வெழுந்தருளியிருக்
கையாலெனவறிக. இதற்கு. பி-ம். சிவப்பிரகாசத்தில் நீடுபராசத்
திநிகழிச்சாஞானநிறைகிரியைத் தரவதனைநிமலன்மேவி நாடரிய
கருணை திருவுருவமாகி. எ-ம். சித்தியாரில். காயமோமாயையன்
றுகாண்பதுசத்திதன்னால். எ-ம். திருவாசகத்தில் உடையாணடுவு
நீயிருத்தி எ-ம். வருமேதுக்களைக் கண்டுகொள்க. இனிமல்முதலா
யினமாய்க்கும். எ-கு. ஆணவமலமுதலாயினவெல்லாவற்றையுஞ்
சேதனம்பண்ணினவனென்று பொருள்கூறியதற்கு, பி-ம். போற்
றிப்பஃறொடையில். முன்னின்று மும்மலந்தீர்த்தாட்கொள்கை.
எ-ம். தத்துவவிளக்கத்தில் கதிதருகாழி மன்கட்டிடும்பாசங்கண்
மூன்றவைதாம், புதிதருமாணவம்போகஞ்செய்தகன்மமுமாயை
யுமா, முதியதுதானொன்று முன்பினில்வந்தது சேதனன்க, ணதி
கமறைப்பனவாயிரகோடிவிருத்திகளே, எ-ம். கண்டுகொள்க.
உலகவுயிர்க்கெல்லாமொருகண்ணே. எ-கு. சர்வான்மாக்களுக்
கும் ஓரறிவாகநின் றறிவிக்கிறவனென்ற தேதென்னில் ஆதித்த

னென்றுயிருந்தும் பலகண்களுக்குங் காட்டாநின்றதுபோ லெனவறிக. இதற்கு பி-ம், சித்தியாரில் கண்கட்கிருளினையொளியாலோட்டுமிரவியைப்போல்வீசன். எ-து. கண்டுகொள்க.

இங்ஙனம் வியாக்கியைச்செய்யப்பட்ட விந்த இருபாவிருபஃதுஎன்னும் நூலுக்குச் செய்யுட்டோறு மாசாரியனைச்சீஷன் கேட்டும் வினவுக்குவிடையமாக வாசாரிய ரருளிச்செய்யப்பட்ட சொற்களையெல்லா மீளவுஞ் சீஷன் மறுத்தமொழியாகவருகையாலாசாரிய ரருளிச்செய்ததெல்லாங் கீழ்ப்பட்டுச் சீஷன்சொல்லே மேற்பட்டு வருமதைப் பொருளெனக்கொள்வாருமுளர். அதுசித்தாந்தப்பொருளுக்கு விரோதமெனவறிக அப்படியானால் வேறு பொருள் கொள்ளுமிடத்து மற்றுமுண்டான நூல்களையோதியறிந்து குருமுகாந்தரமாகக் கேட்டறிந்து சம்பிரதாயம்வந்த சித்தாந்திகளுக்கொழிய தற்போதங்கொண்டறிவார்க் கறியப்படாதெனவறிக அப்படியாசாரியர் சத்தியமுஞ் சீஷன்சொல் லசத்தியமென்னுங்கருத்தைப்பற்றி யிந்நூலுக்கு வியாக்கியை யெழுதினதேதென்னில் கண்ணகன்ஞாலத்து என்னுமுதல்கவிலே சீறியருளல் சிறுமையுடைத்தாலென்று சீஷன் கூறியதற்குத்தரமாக வாசாரியர் அபக்குவ பக்குவகுறிப்பார்த்தருளினங் குருமுதலாய் எ-கு. பொருள் நாம்சொன்னவத்தங்களை மாறுபாடாகக் கொள்ளுகையாலே நாங்கோபித்துக்கொண்டோமென் றாசாரியர் திருவுளம்பற்றுகையாலே யாசாரியர் திருவுளம்பற்றினதே சத்தியம். அந்தவாசாரியர் வாக்கியத்துக்குச் சாத்திரசம்மதி யெழுதினதினாலும் ஆசாரியர் திருவுளம்பற்றினது சத்தியமென்கிறதைக் குருமுகாந்தரமாகக் கேட்டு அநுபவத்தாற் கண்டுகொள்க.

திருச்சிற்றம்பலம்.

இருபாவிருபஃது மூலமும் உரையும்

முற்றிற்று.